# என் பழைய பனை ஓலைகள்

வைரமுத்து



# என் பழைய
# பனை ஓலைகள்

---

வைரமுத்து

# என் பழைய பனை ஓலைகள்
மரபுக் கவிதைகள்

வைரமுத்து

ரூ. 75/-

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 1983 |
| ஒன்பதாம் பதிப்பு | : | டிசம்பர் 2002 |
| பத்தாம் பதிப்பு | : | மார்ச் 2004 |
| பதினொன்றாம் பதிப்பு | : | பிப்ரவரி 2006 |
| பன்னிரண்டாம் பதிப்பு | : | நவம்பர் 2008 |
| பதின்மூன்றாம் பதிப்பு | : | மார்ச் 2011 |
| பதினான்காம் பதிப்பு | : | ஜனவரி 2014 |

உரிமை : டாக்டர் பொன்மணிவைரமுத்து

வெளியீடு:

சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட்.,
சென்னை-24, ✆ +91-44-2491 4747

விற்பனையாளர்:

திருமகள் நிலையம், சென்னை
✆ +91- 44 - 2434 2899

மின்னஞ்சல் :
enquiry@thirumagalnilayam.com

அச்சு : பிரியதர்சினி பிரிண்டோகிராப்ஸ், சிவகாசி
✆ 91 - 4562 - 223230

# என் வாலிப ரத்தம்

இந்த 'என் பழைய பனை ஓலைகள்' கரையான்களை விட விமர்சகர்களுக்கே நல்ல விருந்தாகும்.

எனது பதினேழாவது வயதிலிருந்து இருபத்தொன்றாவது வயது வரை யாப்பிற்கு நானும், எனக்கு யாப்பும் அடிமையாயிருந்ததற்கு ஆதாரங்கள் இந்த என் பழைய பனை ஓலைகள்.

இதிலுள்ள பல கவிதைகள் வைகறை மேகங்களுக்கு மூத்தவை அல்லது இளையவை.

என் ஏடுகளை எடுத்து, தூசு தட்டி நான் வாசித்தபோது நானே எனக்கு ரசிகனானேன்.

பல மாதங்களாய்ப் பட்டாளத்தில் இருந்து வந்தவன், தன் பருவமனைவியின் கட்டுக்குலையாத அழகைக் கண்டு ரசிப்பதுபோல் ரசித்து ருசித்தேன்.

ஓ! மரபென்பது ஆளத்தெரிந்தவன் கைகளில் ஓர் அற்புத மான ஆயுதந்தான்.

இந்த முத்தாரங்களை அச்சுக்குக் கொடுத்து அச்சாரங்கள் ஆக்கினேன்.

இதை வெளியிடுவதன் நோக்கம், என் விமர்சகனும் ரசிகனும் சாகும்வரைக்கும் சமாதானமாய் இருக்கக் கூடாது என்பதுதான்.

இதை இப்போது வெளியிடுவதன் மூலம் உங்கள் பிம்பம் பாதிக்கப்படுமே என்று சிலர் இரங்கல் தீர்னம் நிறைவேற்றி னார்கள்.

எப்படி? எப்படி பாதிக்கப்படும்?

இவைகளெல்லாம் சேர்ந்ததல்லவா என் பிம்பம்?

நான் என் என்பது என் நிகழ்காலம் மட்டுமா? இல்லையே!

பட்டாடைகள் பூட்டிக் கொள்ளும் உடம்பும் நித்தம் ஒரு பொழுதிலேனும் நிர்வாண இருப்பது நிஜமல்லவா ?

கருத்துலகத்தின்பால் கவனம் பதியாத பருவத்தில் எனது வாலிபரத்தம் துள்ளிய துள்ளல்களே இந்தக் கவிதைகள்.

மொழிக்குள் தான் சிக்கிவராமல் ஒரு கவிஞன் மொழியைத் தனக்குள் சிக்கவைப்பது சிரமந்தான்.

சுழித்துக் கொண்டோடும் விருத்தங்களும், நுரைத்துக் கொண்டோடும் வெண்பாக்களும் சப்தக் கோலங்களான சந்தங் களும் என் மனசில் பழைய வாசனைகளைப் பரப்புகின்றன.

லட்சம் கனவுகளைச் சுமந்துகொண்டு இந்தக் கிராமத்துக்குயில் பச்சையப்பன் கல்லூரி எனும் வனாந்தரத்துக்கு வந்தது.

இந்தக் குயில் வசந்தகாலத்தில் கூவவில்லை; வசந்தத்துக்காக கூவியது.

அந்த நேரத்தில் எனக்கிருந்த ராட்சச உணர்ச்சிகளை நான் இறப்பதற்கு முன்னால் இன்னொரு முறை எய்திவிட முடியுமா என்பது ஐயப்பாடுதான்.

இப்படியெல்லாம் நான் கூவிப் பழகியிராவிட்டால் என்னால் ஒரு வெற்றிச் சங்கை முழங்கியிருக்க முடியாது.

எனது அந்த நேரத்தின் கோபம் - அந்த நேரத்தின் காமம் - அந்த நேரத்தின் சோகம் - அந்த நேரத்தின் தாபம் இவைகளை யெல்லாம் கலாபூர்வமாகப் பதிவு செய்து வைத்திருந்ததை நான் பாராட்டிக் கொண்டிருக்கிறேன்.

இன்று இந்த விருத்தங்கள் பலவற்றோடு எனக்குக் கருத்து வேறுபாடு இருந்தபோதிலும் இவற்றைநான் திராவகத்தை ஊற்றித் தீய்த்துவிட முடியாது; ஏனெனில் இவையாவும் என் பழைய முகங்கள்.

நான் பிறப்பதற்கு முன்பே கவிஞர்களாய் இருந்த சிலரின் பாதிப்பு இதனில் பரவலாய்ப் படிந்திருக்கும்.

நான் இந்த உயரத்தில் ஏறுவதற்கு, என் உடலில்பட்ட சிராய்ப்பு களின் எண்ணிக்கை என் விமர்சகனுக்கும், ரசிகனுக்கும் தெரிந்தாக வேண்டும்.

பச்சையப்பன் கல்லூரியில் பயின்ற ஆறாண்டுகளில் நான் மரபுக் கவிதைகள் எழுதியது முதல் மூன்றாண்டுகள்.

வகுப்பறைகளில் அல்ல - புல்வெளிகளில்தான் நான் அதிகம் வாழ்ந்திருக்கிறேன்.

நோய் நாட்கள் தவிர எல்லா நாட்களிலும் எழுதிக்கொண்டுதான் இருந்திருக்கிறேன்.

கவியரங்க மண்டபங்களெல்லாம் எனக்குக் கல்யாணக் கூடங்களாக இருந்திருக்கின்றன.

என் கவிதை வரிகளை வெட்டி, விடுதி ஜன்னல்களின் நெற்றி களில் ஒட்டி மாணவர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள்.


இந்தக் கவிதைகளில் இருக்கும் சில கருத்துகளுக்காக நான் வெட்கப்படுகிறேன்; ஆனால், ஒரு போதும் வருத்தப்பட மாட்டேன்.

பாரதிக்குப் பிறகு பாரதிதாசன் பரம்பரையைச் சார்ந்த ஒரு கவிஞன், தன் கருத்துக்களிலும், வடிவங்களிலும் பெற்றிருக்கும் பரிணாமங்களை அளக்க இந்த என் பழைய பனை ஓலைகளும் பயன்படும் என்று நம்புகிறேன்.

இந்த மொந்தை மட்டுமல்ல, கள்ளும் பழையதுதான்; போதையின் நெடி நிறையவே அடிக்கும்.

சென்னை

13.1.1983



# விடுதலைவீரன் பாரதி

பாவலர்கள் பாலூட்ட பாண்டிப் பழம்பதியில்
காவலர்கள் தாலாட்ட கற்ற மனங்களெனும்

தொட்டிலிலே அன்று துயின்று மிக வளர்ந்து
பட்டுப்போல் நாவசைத்துப் பால்மழலை சொல்லிவந்த

கட்டித் தமிழே! கவிதைப் பெருஞ்சுவையே!
எட்டுத் திசையும் எழில்வளர்த்த பூமகளே!

இளைய மகனைஉன் இன்பமலர்க் காட்டுள்
அலைய விடுதாயே! அன்புப்பால் ஊட்டு!

கலைக்கண்ணால் இன்பக் கருணைமழை கொட்டி
அலைக்கரத்தால் என்னை அரவணைத்துத் தாலாட்டு

கற்பனைத் தேரில் கவியுலகங் காட்டியிந்த
அற்பனை உன்கையால் ஆளாக்கி வாழவிடு!

குற்றாலத் தேனருவி கொட்டுகின்ற பாவனைபோல்
வற்றாத கற்பனைகள் வந்தென்னைச் சூழவிடு!

பனிமலருக் குள்ளே படிந்துவந்த பூந்தமிழைக்
கனிமணக்கப் பாடும் கற்றோர் அவையினிலே

*நடைபயில வந்திருக்கும் நல்லமகன் நானுன்றன்*
*கடைக்குட்டி என்பதனைக் கற்றவர்க்குச் சொல்லிவிடு*

*தொட்டிலிலே கிடந்தவெனைத் தொல்காப் பியன்படுத்த*
*கட்டிலிலே படுவென்ற கனிமகளே! நல்வழியில்*

*இட்டுச் செல் தாயே! இனியமகன் உன்பாதம்*
*தொட்டுத் தொடங்குகிறேன் தூயவளே! வாழியநீ!*

*முப்பாலில் குறிப்பாக மூன்றாம்பால் கற்றுணர்ந்த*
*அப்பாவிக் கவிமகன் நான்; ஆனாலும் இலக்கணங்கள்*

*தப்பாமல் கவியுரைப்பேன்; தமிழரங்கில் விருந்து வைப்பேன்*
*உப்பில்லா விருந்தெனினும் ஒப்பில்லா விருந்திதுதான்.*

*பாட்டெழுதிப் பாட்டெழுதிப் பாரதத்தின் விடுதலையைத்*
*தீட்டிவைத்த நாயகனைத் தேனமுதப் பாவலனை*

*நாய்ப்பால் குடிப்பதொன்றே நல்லதெனச் சொல்லிவந்த*
*வாய்ச்சாலக் காரர்களின் வாலறுத்துப் போட்டவனை*

*பேடிப் பகைவர்களைப் பேயர்களைப் பாட்டாலே*
*சாடி, இகழ்ந்து சந்தியிலே விட்டவனை*

*எதுகைக்கும் மோனைக்கும் இணைபாலம் இட்டவனை*
*மது, கையில் இல்லாமல் மணிக்கவிதை தந்தவனை*

*எலுமிச்சைப் பழமிரண்டை இறுத்தும் அளவுக்குக்*
*கொழுத்த மீசையொடு கொள்கை வளர்த்தவனைப்*

*பாடிக் களிக்கின்றோம்; பாட்டாலே புகழ்மாலை*
*சூடிக்கொடுத்துச் சுகக்கவிதை சொல்கின்றோம்*

*சீலக் கவிக்குலத்தீர்! சிறுகுயில்நான் பாடுகிறேன்*
*ஆலயத்து வாசலிலே அமாவாசை நிலவானேன்.*

*காட்டினிடிச் சத்தத்தில் கடுகினொலி கேட்டிடுமா?*
*காட்டாறு நீவிர்; நான் கலங்கிவிட்ட சிறுகுட்டை*

*பாட்டாகப் பாடும் பைந்தமிழர் கவிக்குலமே!*
*கூட்டாளி எனைநீங்கள் கூட்டித்தான் செலவேண்டும்*

வானமும், விண்மீனை வாங்கி வைத்துளதே!
தேனமுதப் பாவலரே! சின்னவனை ஏற்றிடுவீர்

வாழை மலர்மண்ணை வணங்கிப் பணிவதுபோல்
ஏழை மகனிங்கே இசைத்தேன் என் வணக்கம்.

(வேறு)

அந்தியிலே பூப்பதெலாம் அல்லிப் பூவா?
ஆழியிலே கிடப்பதெலாம் அழகு முத்தா?
சந்தையிலே விற்பதெலாம் தேனைப் போலத்
தனி இனிப்பைத் தருகின்ற சரக்கா? இல்லை
சந்தியிலே தரித்த தமிழ்க் கவியை நாட்டில்
சரஞ்சரமாய்த் தொடுத்திங்கே தமிழைக் காத்த
செந்தமிழன் பாரதியைப் போலே நாட்டில்
தேனமுதப் பாவலன்யார்? என்னை விட்டால்.

ஆசைக்குச் சிலர்கவிதை புனைவார்; நாட்டில்
அரைவயிற்றுப் பசியதனைத் தீர்த்துக் கொள்ள
தோசைக்குச் சிலர்கவிதை புனைவார்; தம்மைத்
துளைக்கின்ற வறுமையெனும் பேயை மாய்க்கக்
காசுக்குச் சிலர்கவிதை புனைவார்; மாயக்
கண்ணாலே கதைசொல்லித் தன்னை விற்கும்
வேசைக்கும் சிலர்கவிதை புனைவார்; நாட்டு
விடுதலைக்குக் கவிபுனைந்த புலவன் யார்? யார்?

சொக்கி அவன் பாட்டாலே துடித்தெழுந்து
சூரர்கள் தோன்றியதாய் வரலா றுண்டு
முக்கனியின் சாற்றோடு தேனைச் சேர்த்து
மோகப்பூங் கவிதந்தான்; புரட்சித் தீயைக்
கக்கியவன் அவனேதான்; புதுமைப் பாதை
காட்டியவன் பாரதிதான்; வெள்ளை யர்க்குக்
கொக்கி அவன் என்பேன்நான் தேனைச் சிந்தும்
கோமளப்பூங் கவிவடித்த கொள்கை வேந்தன்

போட்டுடைத்த மண்பாண்டம் போலே நாட்டில்
பூந்தமிழர் சிதறியதைக் கண்டே ஒன்றாய்க்
கூட்டுவிக்கும் எண்ணத்தால் கவிதை மூலம்
கொள்கையினைத் தந்த மகன்; புரட்சிப் பாலை
ஊட்டியவன்; இந்தியரின் உணர்வுக் கெல்லாம்
உருவளித்தான்; தனக்கென்று வரலா றொன்றைத்
தீட்டியவன் தேன்கவிஞன்; பகைவர் தம்மைத்
திண்டாட வைத்தானே புரட்சிக்காரன்

கொடிவைத்த கையறுந்து வீழ்ந்திட் டாலும்
கொள்கையது வீழாது, வீர மென்னும்
செடிவைத்துக் கவிநீரால் மரமாய் ஆகச்
செய்தானே சிந்துகவி வளர்த்த தந்தை
பொடிவைத்துப் பேசுவதில் அண்ணா வைப்போல்
புவிமீதில் யாருண்டு? பகையை மாய்க்க
வெடிவைத்துப் பாடிவந்த வித்தைக் காரன்
வேந்துகவி பாரதிபோல் வேறிங் கேயார்?

சித்தத்தில் இனிக்கின்ற கவிதை தன்னைச்
செவியினிக்கத் தந்தமகன் புகழைச் சொன்னோம்
மொத்தத்தில் அவன்நல்ல புரட்சிக்காரன்
மோகனப்பூங் கவிமகனைப் புவியோர் போற்றும்
வித்தகனைக் கவிக்குயிலைப் பகையை நன்றாய்
வேரறுக்க வந்தவனைத் தமிழை நாளும்
முத்தமிட்ட பூமகனை என்றும் எங்கள்
மூச்சடங்கிப் போனாலும் இதயம் பாடும்

(வேறு)

சொல்லெல்லாம் கவியாகப் பெய்தான் - பாட்டுச்
சுடராலே பகைவர்தலை கொய்தான் - நாட்டில்
வல்லவர்க்கே உணர்வூட்டி
வாள்கொண்டு பகையறுக்கச்
செய்தான் - எல்லாம் - மெய்தான்

பாட்டுக்கே அவனோர்பூந் தோட்டம் - நல்ல
பகுத்தறிவு சொல்லிவந்த கோட்டம் - இந்த
நாட்டுக்குப் புதுவாழ்வை நாட்டத்தான்
அவன் சொன்னான்
திட்டம் - புதுச் - சட்டம்

(வேறு)

விடைதந்தான் புரியாத பழம்பாட்டுக்கு
வீரத்தால் தோள்தட்டிப் பகையை மாய்க்கும்
படைதந்தான்; பகுத்தறிவைப் பாடி நாட்டைப்
பாசறையாய் மாற்றி வைத்தான்; பாட்டில் தேனின்
அடைதந்தான்; பாமரரும் அறியும் வண்ணம்
ஆக்கிவைத்தான் தமிழ்க்கவியை; பாட்டால் நெய்த
உடைதந்தான் தமிழன்னை போர்த்துக் கொள்ள
உயிர்தந்தான் தன்னையவள் சேர்த்துக் கொள்ள

வண்டாடும்சோலையிலே வைகைப் பூவாய்
வாழ்ந்தவனைத் தமிழ்க்கவிஞர் தாதை தன்னைக்
கொண்டாடக் கூடியுள்ளோம் சரிதான் எல்லாம்
குவலயமே உயர்ந்ததெனப் போற்றி நின்று
கொண்டாடும் தமிழுக்குச் சிலபே ரிங்கே
குழிதோண்டப் பார்க்கின்றார் அவரை எல்லாம்
துண்டாடிப் பகைமுடிப்போம் பகைவர் மார்பைத்
துளைத்தாலே நம்மிமைகள் தூக்கங் காணும்.

●

(19.9.1971 பாரதி விழாவில் சென்னை மாவட்ட நூல் நிலையத்தில் அரங்கேற்றப்பெற்ற கவிதை)

# மன்னிப்பு

(அலெக்சாண்டர் – சாமன்யனல்லன்; சரித்திரம். சாதாரண னல்லன்; சகாப்தம். அவன் 'தீபு' நாட்டின் மீது படையெடுத்து வெற்றிகண்ட போது, படைத் தலைவ னொருவன் அந்நாட்டின் நற்குடி மங்கையொருத்தியை நாசப்படுத்திவிட்டான்; கன்னியவள் கற்பைக் களவாடி விட்டான் அந்தக் காமுகன். வீரமங்கை அந்த வெறி கொண்டவனைக் கிணற்றிலே தள்ளிக் கொன்றுவிட்டாள். காவலர்கள் அவளைப் பிடித்து வந்து, அலெக்சாண்டர் முன்னால் நிறுத்தினர். அலெக்சாண்டர் அவளை என்ன செய்தான் தெரியுமா? 'புளூ டார்க்' போன்ற வரலாற்றறிஞர்கள் அவனை மாவீரனாகக் காட்டு கின்றனர். நானவனை மனிதாபிமானமிக்க ஒரு மனித னாகக் காட்டியிருக்கிறேன்; அல்ல; காட்ட முயன்றிருக் கிறேன். இதோ அந்தப்பூவையின் புலம்பல்...)

*பிளிப்மன்னன் பெற்றவனே! உலகைப் பற்றும்*
*பேராசை கொண்டவனே! உன்னிடத்தில்*
*சளிப்பேச்சுப் பேசவில்லை; என்றன் கற்பே*
*சாகடிக்கப் பட்டதற்குப் பதில்தான் என்ன?*
*கிளிக்குலத்தைக் கொள்வதுவா வீரம்? கெட்ட*
*கீழ்மகனால் கற்பிழந்த கணிகை ஆனேன்*
*எளியமகள் என் கற்பைச் சூறை யிட்ட*
*ஈனமகன் செத்ததனால் இழப்ப தென்ன?*

*ஆலையிலே சிக்குண்ட கரும்பாய் என்னை*
*ஆக்கிவிட்டான்; மங்கைநான் பிணமாய் ஆனேன்*
*மாலையிலே சேர்ந்திட்ட பூக்கள் மீண்டும்*
*மலர்க்கொடியை வந்தடைவதில்லை மன்னா!*
*காலையிலே பறிபோன என்றன் கற்பும்*
*கன்னியெனைச் சேர்வதில்லை; சொந்த வீட்டுச்*
*சோலையிலே பூத்தமலர் என்றே என்னைச்*
*சுவைத்தவனைக் கொன்றதிலே குற்றம் உண்டா?*

*சிரமறுந்து வீழ்ந்தாலும் பெண்டிர் தம்மைச்*
*சிறைசெய்ய விரும்பாத உன்னி டத்தில்*
*தரமிழந்த படைத்தலைவன் இருக்க லாமா?*
*தாமரையில் முள்ளிருக்கச் சகிக்க லாமா?*
*நரம்பறுந்து போனதெனில் வீணை தன்னை*
*நல்லதெனச் சொல்வாரா? ஒழுக்க மென்னும்*
*வரம்பறுந்து போனவனை வைத்தி ருந்தால்*
*வளமான உன்புகழில் களங்கம் சேரும்.*

*பொன்னளந்த தாய்நாட்டின் புகழினோடு*
*பூவைநான் கற்பினையும் இழந்து விட்டேன்*
*பண்பிழந்து, பாவியெனைக் காமத்தீயில்*
*பலியாக்கி விட்டவனைப் பழிவாங் கத்தான்*
*கண்ணிழந்த காமுகனைக் கிணற்றில் தள்ளிக்*
*கதையினையும் முடித்திட்டேன்! இருந்தும் கற்பில்*
*மண்விழுந்து விட்டதுவே மன்னா! அந்த*
*மாசகற்ற இதுவொன்றா போதும்? இல்லை!*

*நெருப்பிலிட்ட பஞ்சினின்றும் ஆடைதன்னை*
*நெய்தெடுக்க இயன்றிடுமா நானும் இங்கே*
*தெருப்புழுதி போலானேன்; பறித்தெ டுத்துத்*
*தீயிலிட்ட கொடியானேன்; என்னை மாய்க்க*
*நெருப்பிலிடும் தண்டனையே வந்த போதும்*
*நெஞ்சார அதையேற்பேன்; உலகில் யார்க்கும்*
*இருமுறையா சாவுவரும்? இல்லை இல்லை!*
*ஏந்திழைநான் ஏற்கெனவே இறந்து விட்டேன்!*

*கடைவிழியில் நீரொழுக மங்கை நிற்கும்*
*காட்சியினை அலெக்சாண்டர் கண்டு கண்டே*
*உடைந்தவொரு கண்ணாடி போலே உள்ளம்*
*உருக்குலைந்து கண்ணீரை உதிர்த்துவிட்டான்*
*நடைதளர்ந்து அவளிடத்தில் நடந்து சென்று*
*"நல்லவளே பெண்ணணங்கே! உன்பால் என்றன்*
*படைத்தலைவன் செய்திட்ட பாவத் திற்குப்*
*பாவியெனை மன்னிக்க வேண்டும் தாயே!*

*தண்டனையா? நானுனக்குத் தரவா? அய்யோ!*
*தங்கத்தைக் களிமண்ணில் உரச லாமா?*
*என்னுணர்வைக் கொல்லாதே! எனக்கு நீயே*
*ஏதேனும் தண்டனைதா ஏற்றுக் கொள்வேன்!*
*பெண்ணணங்கே! கண்ணீரை நானுன் மீது*
*பெய்தாலும் எனைச்சார்ந்த பழிநீங் காதே!*
*மண்ணாசை கொண்டவன்நான் ஆனால் என்றும்*
*மலர்மீது வாள்வீச அறியேன் தாயே!*

*கன்னித்தேன் உனைத்திருடிக் குடித்து விட்ட*
*காமுகனைக் கொன்றதுதான் நியாயம்; என்னை*
*மன்னித்தேன் என்றொரு வார்த்தை சொல்லி*
*மன்னவனென் மாசகற்ற வேண்டும் அம்மா!*
*உன்னைத்தான் கேட்கின்றேன் தாயே! என்றன்*
*உதிரத்தை உன்காலில் கொட்டச் சொன்னால்*
*என்னெஞ்சம் தயங்காதே!" என்றான் அந்த*
*எழில்மகளோ நெஞ்சுருகித் துடித்துப் போனாள்.*

*"நானந்தத் தீயவனைக் கண்டி ருந்தால்*
*நாய்களுக்கு விருந்தாக்கிப் போட்டிருப்பேன்*
*தேனளிக்கும் தீஞ்சுவையை முதிர்ந்து வந்த*
*தீங்கரும்பு தந்தாலும் தவறே இல்லை*
*நானளிக்கும் தண்டனையை நீயே அந்த*
*நாய்மகனுக் களித்ததிலும் தவறே இல்லை*
*வானளந்த என்புகழில் களங்கம் ஒன்று*
*வந்ததுவே!" எனக் கண்ணீர் வடித்தான் மன்னன்.*

●

# நீதான் வேண்டும்

எடுக்காத ஓவியமே !
இன்னமுதத் தேன்கனியே !
எவரும் இன்னும்

படுக்காத பஞ்சணையே!
பருவத்துப் பூங்கொடியே!
பறித்து வந்து

தொடுக்காத பூச்சரமே!
சொல்லாத சுவைக்கவியே !
சோலைப் பூக்கள்

கொடுக்காத மலர்க்கண்ணால்
குறும்பாக நீசிரித்துக்
குளிர்ச்சி மூட்டு!

•

விக்கலுக்கு நீர்போல்என்
வேதனைக்கு நீவேண்டும்
விளைந்த நல்ல

முக்கனியின் சுவைச்சாறே!
மூண்டெழுந்த கலைப்பேறே!
முல்லைப் பூவில்

தொக்கி நிற்கும் சுவைத்தேனே!
துண்டாடும் விழியழகே!
சுழலும் நெஞ்சின்

சிக்கலுக்கு விடையென்ன?
செந்தேனே! உன்னுதட்டுச்
சிரிப்புத் தானே!

•

பக்கத்தில் நீவந்தால்
பழச்சாற்றை நான் கொஞ்சம்
பருகிப் பார்ப்பேன்

முக்கனியில் முதல் கனியாய்
மூண்டெழுந்த கன்னத்தில்
மோக முத்தம்

பக்குவமாய் நான்தருவேன்
பவளப்பூ மேனியினைப்
பார்த்துப் பார்த்துச்

சொக்கிவிடுவேன் சுழன்றிடுவேன்
சுவையொழுகும் சுளையுதட்டைத்
தொட்டுப் பார்ப்பேன்.

•

மறைக்கின்ற பொருளுக்கே
மதிப்பதிகம் என்பார்கள்
மறுக்க வில்லை.

சிறைக்கைதி போலானேன்
தேனுன்னைத் தினமெண்ணித்
தேய்ந்து போனேன்.

திரைநீக்கிப் பார்த்தால்தான்
தெரிகின்ற பொருள் தெரியும்
சிரிக்கும் பூவே!

விரைவாக வந்துவிடு
வேதனையைத் தணிக்கின்ற
விருந்தை நீதா!

•

*தங்கப்பூ நிறமெடுத்துத்*
*தாமரையின் குணமெடுத்துத்*
*தனித்தேன் சிந்தும்*

*செங்குமுத அழகெடுத்துத்*
*தேன்குவளை விழியெடுத்துச்*
*சிரிக்கும் முல்லை*

*அங்கமெலாம் மிகத்தொடுத்தே*
*அங்கங்கே செண்பகப்பூ*
*ஆடி நிற்கப்*

*பொங்குமெழில் சிந்துமுனைப்*
*பூவையெனச் சொன்னாலே*
*பொருத்தந் தானே!*

•

*முத்தமிட்டு முத்தமிட்டு*
*மோகமெனும் கடலுக்குள்*
*மூழ்கிப் பார்க்க*

*எத்தனைநாள் தவங்கிடந்தேன்*
*இருந்தாலும் பேரழகே!*
*என்னை இன்னும்*

*பித்தனெனச் செய்கின்றாய்*
*பெரும்மோகக் கவிகொஞ்சம்*
*பேசலாம்வா!*

*நித்திலமே! துடிக்கும்என்*
*நெஞ்சத்து நோய் தீக்க*
*நீதான் வேண்டும்!*

•

# இடுப்பொடித்து அடுப்பெரிப்போம்

எல்லையில் பகைவர் கூட்டம்
இந்திய நாடே! முல்லைக்
கொல்லையில் நரிக ளாட்டம்
குதித்தாடும் பந்தைப் போலே
ஒல்லையில் விரைந்து சென்றே
உன்மத்தர் பகை யறுப்போம்
முல்லையின் இதழின் மீது
முள்ளையா பொறுத்தி ருப்போம்?

எரிமலை உச்சி மீதில்
இதங்காண எண்ணும் அந்த
நரிகளைக் கூறு போட்டு
நாய்களுக் கிடுவோம்; தங்கச்
சரிகைபோல் மின்னும் நாடே!
சாய்த்திடு பகையை; எங்கும்
விரிகலை வளர்த்த நாடே!
வேங்கைபோல் எழுந்து வெல்வாய்.

கருங்கல்லை அரிப்ப தற்குக்
கறையான்கள் முயல லாமா?
சிறுயானை தன்னைப் பற்றச்
சிலந்திநூல் பின்ன லாமா?
திருநாட்டை எதிர்த்தே இங்கே
தீயவர் கிளம்ப லாமா?
நெருப்பையே எதிர்க்கும் ஈயா?
நீசரை அறுத்துப் போடு.

உருவிலே விலங்கு போலே
உலவிடும் யாகி யாகான்
பெருநரி எண்ணங் கொண்ட
பேயன்தான் அவனை அன்று
கருவிலே வளர்த்த போதே
கலகத்தைச் சொல்லித் தந்து
தெருவிலே பெற்றுப் போட்ட
சிறுக்கியைக் கொல்ல வேண்டும்.

பொட்டென்று பகையை வீழ்த்தும்
புலிகள்தாம் நமது வீரர்
குட்டென்று சொன்னால் போதும்
குருதியே குடிப்பர்; வெல்வர்
வெட்டொன்று துண்டி ரண்டாய்
வீழ்த்திடும் வீர ரின்று
சட்டென்று பகைமு டிப்பர்
சரித்திரம் தீட்டி வைப்பர்.

விந்தைதான் ஆமாம்! இங்கே
வேடிக்கை; காற்றுப் போன
பந்துகள் குதித்த தாகப்
பார்த்தவர் எவரு மில்லை
சிந்தனை கெட்டுப் போன
சிறுமதி நாய்கள் போர்க்கு
வந்ததோர் சேதி கேட்டோம்
வால்கூட மிஞ்சா தாமாம்!

கோழியின் குஞ்சைக் கொன்று
குவித்திட்ட நரிகள் இன்று
வேலியைத் தாண்டி வந்து
வேங்கையை எதிர்க்க லாமா?
ஆழியில் எலிபோல் ஆக்கி
அரக்கரைப் பிளந்து கொன்று
சோழியாய் வைத்தே இங்கே
சொக்கட்டான் ஆட வேண்டும்.

போகட்டும் பாவம் என்று
புலையனை உலவ விட்டால்
நாகத்தை ஏவு கின்றான்
நம்மையே கடிக்க; இங்கே
ஆகட்டும் பார்ப்போம்! என்ற
அகராதி வேண்டாம்; செத்து
வேகட்டும் பகைவர் மேனி
விரையட்டும் படைகள் இன்று.

பேச்சிலே இணங்க மாட்டான்
பேதையன்; உயிரைக் கொல்லும்
தீச்சுழல் அறியா தன்றோ
தென்றலை; இனிநாம் குண்டு
வீச்சிலே பேச வேண்டும்
விலைமகன் நம்மை ஏசும்
கூச்சலை ஒடுக்க வேண்டும்
குருதியைக் குடிக்க வேண்டும்.

*அரக்கரைப் போரில் வீழ்த்தி*
*அன்னவர் நரம்பெ டுத்துச்*
*சரஞ்சர மாக்கி நல்ல*
*சங்கிலி செய்து, கட்டித்*
*தரதர வென்றி ழுத்துத்*
*தாயகம் கொண்டு வந்தே*
*அரங்கினில் நிறுத்த வேண்டும்*
*அகதிகள் சிரிக்க வேண்டும்.*

*அடுத்தவர் மீதில் என்றும்*
*அளவிலாப் பழியைச் சாற்றிக்*
*கெடுப்பதே தொழிலாய்க் கொண்ட*
*கீழ்மகன் செயலை மாய்த்தே*
*இடுப்பினை முறித்துப் போட்டே*
*எலும்பினை எண்ணி வந்தே*
*அடுப்பினில் எரிப்போம் ஆமாம்!*
*அஃதொன்றே நல்ல நீதி.*

*பாவிகள் வங்க நாட்டில்*
*படுகொலை செய்த போதில்*
*ஓவியம் போலி ருந்தாய்*
*ஒரு பேச்சும் பேச வில்லை*
*காவிய நாட்டின் மீது*
*கைவைக்கத் துணிந்த பேயர்*
*ஆவியைக் குடிப்போம் நாங்கள்*
*ஐ.நா.வே! தலையி டாதே!*

●

(1.12.71 – பாரத – பாகிஸ்தான் யுத்தத்தின் போது ஏற்பட்ட குருதிக் கொதிப்பு)

# விடுதலைவீரர் நேரு

என்னாடு பொன்னாடு பகைவர் கையில்
இப்போது பலியா(டு), இருட்டு வீடு
கண்ணோடு நரம்போடு கலந்த நாடு
கருவாடு போலிங்கே இளைத்த தோடு
பொன்னோடு பொருளோடு புகழி னோடு
போக்கிவிட்(டு), ஏந்தியதே கையில் ஓ(டு)
உன்னோடு முன்பாடு முடிந்தி டா(து)
உதைத்தாடு துண்டாடு பகையைச் சாடு

மணக்கின்ற பூவல்லிக் குளத்தில் பூவை
மாய்க்கின்ற பிணக்கள்ளி எதற்கு? நஞ்சைத்
தினச்சொல்லி அவரள்ளித் தந்தால் நாமும்
தேனள்ளிக் குடித்தல்போல் குடிக்க லாமா?
எனச்சொல்லி நேருமகன் எழுந்தார் துள்ளி
இரவுக்கோர் முடிவுசொல்லித் தோன்றும் வெள்ளி
எனத்துள்ளி எழுந்தமகன் பெயரைச் சொல்லி
எல்லோரும் பகைமுறித்து வைத்தார் கொள்ளி.

வெண்பட்டு மஞ்சத்தில் முல்லை இட்டு.
விருந்திட்ட நல்வெள்ளித் தட்டு வேண்டாம்
பொன்தட்டு வேண்டுமதில் பாலை இட்டு
புதுத்தட்டுப் பூந்தட்டில் சோற்றைக் கொட்டு
என்பட்டு நான்இட்டு முடித்து விட்(டு)
இதையுண்பேன் என்பதனை விட்டு விட்டுப்
புண்பட்டுக் கண்கெட்டுப் போன நாட்டில்
புதுப்பாட்டு விடுதலைக்குச் சொன்னார் நேரு.

உள்ளத்தில் பூரிப்பு மனம்முல் லைப்பூ
உதட்டோரம் புன்னகைப்பூ உருஅல் லிப்பூ
வெள்ளுடையோ செண்பகப்பூ அதில்ரோ சாப்பூ
விழியோரம் துருதுருப்பு நிறம்சி வப்பு
கிள்ளாப்பூ அவர்பேச்சின் துடிது டிப்பு
கேளாப்பூ அவரெழுத்தின் விறுவி றுப்பு.
எல்லாப்பூ வும்இருக்கும் பகைவந் திட்டால்
இருக்காது விழியிமைப்(பு) அவர்நெ ருப்பு

அணைக்கவரும் போததிகம் வலிக்கும் என்றே
அத்தானை யாவெறுப்பாள் அழகு நங்கை?
பிணைக்கவரும் சிறைக்கஞ்சிக் கஞ்சி யஞ்சிப்
பீடுமிகும் விடுதலையை வெறுத்தா போவார்?
தனைக்கவர்ந்த மனையாளைத் தனியே விட்டுச்
சாக்காடே விடுதலைக்குப் பரிசென் றாலும்
பனைமரம்போல் தனைத்தானே தந்தார் அந்தப்
பாசமகன் வீசவரும் வாசத் தென்றல்

காட்டுமல்லிப் பூக்களையே ஒன்றாய்க் கூட்டிக்
கட்டுவிக்கும் நார்போலப் பளிங்கு நெஞ்சால்
நாட்டுமக்கள் அனைவரையும் கூட்டு வித்தான்
நாமெல்லாம் இந்தியர்கள் என்று சொன்னான்
கேட்டிருந்த நாட்டுமக்கள் ஆமென் றார்கள்
கிளம்பிவிட்ட கடலலைபோல் உணர்ச்சி பொங்க
வேட்டுவைத்து வெள்ளையரை ஓட்டு வித்தான்
விடுதலையை நம்கொடியை நாட்டு வித்தான்

இத்தாலிக் கரிபால்டித் திறமை காட்டி
இந்தியத்து விடுதலையாம் தேரை ஓட்டி
அத்தானென் றழைப்பவளும் தனக்கு நாட்டுக்(கு)
அடுத்தபடி தானென்றான் அழகுச் செல்வன்
சொத்துக்காய் விடுதலைக்கே உழைத்தோர் நாட்டில்
சொத்தினையே விடுதலைக்குத் தந்த வேந்தன்
செத்தாலும் விடுதலைக்காய் இரத்தம் சிந்திச்
சிவக்கட்டும் தன்மேனி என்ற தேனீ.

புள்ளிமயில் அழகியவள் கழுத்தில் மாலை
போட்டவுடன் கதைமுடிந்தா போகும்? இல்லை
பிள்ளையினை அவள்பெற்ற பின்னும் நன்றாய்ப்
பேணுவதில் பெருந்தொல்லை அதுபோல் நாட்டில்
வெள்ளையனை வீழ்த்தியபின் ஏதோ நாமும்
விடுதலையை அடைந்திட்டோம் ஆனால் நம்மைக்
கொள்ளையிடும் வறுமைக்கும் கல்லா மைக்கும்
கொடுமைக்கும் நாமடிமை என்றார் நேரு.

இல்லாமை, கல்லாமை, கொடுமை, ஏழ்மை
　　இந்நாட்டில் சூழ்கயமை எங்கே வாய்மை?
கல்லாமை, கருத்தின்மை இவற்றிற் கெல்லாம்
　　காலமெலாம் நாமடிமை இவற்றை மீண்டும்
சொல்லாமை வேண்டுமதில் தூய்மை வேண்டும்
　　சூழ்கின்ற சமுதாய ஆமை தன்னை
வெல்லாமல் விடமாட்டோம் அவற்றி னின்றும்
　　விடுதலையை நாம் பெறுவோம் என்றார் நேரு.

சாந்தத்தில் தத்துவத்தில் அவனோர் புத்தன்
　　சமுதாய விடுதலைக்கும் அவன்தான் சித்தன்
காந்திமகான் வழிதனிலே தீண்டா மைக்கும்
　　கணக்காக விடுதலையைத் தேடித் தந்தான்.
பூந்தோட்ட நாட்டினிலே வறுமை தன்னைப்
　　போக்கிவிடு தலைதந்த புரட்சிக் காரன்.
மாந்தரினம் அமைதித்தாய் மடியின் மீது
　　மகிழ்ந்தாட விடுதலைதான் வழியென் றிட்டான்.

விருத்தப்பா தனில்நானும் நாட்டில் அன்று
　　விடுதலைப்பா சொன்னமகன் புகழ்ப்பா சொன்னேன்
கருத்துப்பா, கருத்திருக்கும் என்போல் என்று
　　கருதும்பா, இதுகேட்கப் புளிக்கா தப்பா
வருத்தப்பா அல்லஇது மீண்டும் உம்மை
　　வணங்கும்பா நேருபுகழ் வாழ்த்தும் தேன்பா
நிறுத்தப்பா போதுமப்பா என்றே கையை
　　நீட்டுமுனம் நான்பாடி முடிப்பேன் தப்பா?

●

(14.11.71 அன்று சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் கவிதைப் போட்டியில், இலயோலாக் கல்லூரியில் அரங்கேற்றப்பெற்று முதற் பரிசு பெற்ற கவிதை)

# எதிர்காலம்

*நானினைக்கு முன்னே நலம்பாடி வந்தென்றன்*
*ஊனிணைந்த தாயே! உயிர்த்தமிழே! - தேனின்*
*அடைக்கட்டி போன்ற அறமகளே! ஈதுன்*
*கடைக்குட்டி செய்த கவி.*

*முக்கால மவற்றுள் என்றும்*
*முக்கிய மான காலம்*
*எக்காலம் என்று கேட்டால்*
*எதிர்காலம் என்று சொல்வோம்*
*அக்காலம் நாடித்தானே*
*அவனியே வாழும்? ஈது*
*முக்காலம் உண்மை, கால்கள்*
*மூன்றுதாம் முக்கா லிக்கு.*

குயிலுக்குக் கோடைக் காலம்
குளிரல்லிக் கிரவுக் காலம்
மயிலுக்கு வாடைக் காலம்
மங்கைக்கோ தாய்மைக் காலம்
பயிருக்கு மாரிக் காலம்
பறவைக்கு விடியற் காலம்
துயிலுக்குக் களைப்புக் காலம்
சுகவாழ்வுக் கெந்தக் காலம்?

எதிர்காலம் என்று சொன்னால்
இம்மியும் தவறே இல்லை
எதிர்காலம் எனக்கு மில்லை
இரவிலே கதிரோன் இல்லை
புதிர்போல என்றன் வாழ்க்கை
போனதே என்பார் கூட
எதிர்காலம் இருக்கு மென்றே
இருக்கிறார் இன்று மிங்கே

உதயத்தில் மலர்ந்த பூக்கள்
உணர்ச்சியில் பூத்த பாக்கள்
மதகுக்குள் அடைத்த வெள்ளம்
மனதுக்குள் விளைந்த எண்ணம்
உதவிக்குச் செய்யும் நன்றி
உண்மைக்குச் செய்யும் தொண்டு
இதயத்தால் சிறப்ப தெல்லாம்
எதிர்காலப் பயனால் தானே?

*கந்தையும், வடித்துவிட்ட*
*கண்ணீரால் நைந்து போக*
*நந்தனார் போல நல்ல*
*நாளினைப் பார்க்கும் ஏழைக்(கு)*
*எந்தநாள் வந்த போதும்*
*எதிர்காலம் என்ன நல்கும்?*
*ஐந்திலே ஐந்து போக*
*அகப்படும் விடைதான் நல்கும்.*

*தடியிலா அடிக்க வேண்டும்*
*தாமரை மலர? வெற்றிக்*
*கொடியுடன் எதிர்கா லந்தான்*
*கூடிவந் தடையும் என்பார்*
*முடியுமா என்று கேட்டு*
*முயற்சியை மறந்த வர்க்கு*
*விடியுமா காலம்? வான*
*வில்லிலே நாண்தான் ஏது?*

*எதிர்காலம் என்ற பேரை*
*எப்படி இட்டார்? இன்பம்*
*எதிர்கொண்டே அழைப்ப தாலா?*
*இல்லையேல் துன்பந் தன்னை*
*எதிர்த்தாடச் சொல்வ தாலா?*
*இரண்டினுள் எதுவந் தாலும்*
*எதிர்பார்த்து வாழ்ப வர்க்கே*
*எதிர்காலம் அமைவ தாலா?*

தற்காலப் போக்கைப் பார்த்தால்
    தரணியில் எதிர்கா லத்தில்
கற்கால வாழ்க்கை மீண்டும்
    கண்டிட வேண்டும் போலும்
பொற்காலம் எதிர்கா லத்தில்
    பூத்திட வேண்டு மானால்
தற்கால வாழ்வை நாமும்
    தத்துவம் ஆக்க வேண்டும்

●

# கண்வீச்சில் சொன்னாள் கவி

பூவாடை வீசவரும் சிலைதான் - வானில்
பூத்தநிலா அவள்மோகக் கலைதான் - எங்கும்
தாவாத எண்ணுணர்வைத்
தட்டியவள் பூவுதடு
சுளைதான் - இன்ப - வலைதான்!

தொட்டுப்பார் எனச் சொல்லும் கன்னம் - சின்னத்
துடியிடைமேல் தெங்கிளநீர் மின்னும் - இளம்
பட்டுப்பூ மேனியது
பாலாடை போலிருக்கும்
வண்ணம் - மதுக் - கிண்ணம்.

மங்கையவள் கவிப்பூவைத் தொடுப்பாள் - செம்
மாங்கனியாம் தேனிதழைக் கொடுப்பாள் - நல்ல
செங்கரும்புச் சாற்றோடு
தேன்கலந்து பருகவரும்
தனிப்பால் - போல - இனிப்பாள்.

சிட்டுப்போல் மனவானில் பறப்பாள் - மலைச்
செந்தேனை என் நெஞ்சில் சுரப்பாள் - சின்ன
மொட்டுப் பூங் கண்களிலே
மோகமெனும் கவிகொஞ்சம்
படிப்பாள் - கண் - அடிப்பாள்!

*பவளத்தில் ஆனதவள் மேனி - அது*
*பஞ்சணையில் தேனூறும் கேணி - என்றும்*
*அவளைத்தான் என்நெஞ்சம்*
*அனுதினமும் கவிபாடச்*
*சொல்லும் - சுவை - கொள்ளும்!*

*கண்டெடுத்த முத்தாரப் பற்கள் - என்*
*காதுக்குள் மணக்கின்ற சொற்கள் - வாழைத்*
*தண்டெடுத்துச் செய்துவைத்துத்*
*தனிமுல்லை மணங்கொடுத்த*
*மங்கை - நிலவின் - தங்கை!*

*சங்கத்தில் தமிழ்படித்த காலம் - இந்தச்*
*சரமுல்லை சொல்பெற்றால் போலும்! - இளங்*
*குங்குமத்தில் நிறங்கொடுத்துக்*
*கோமளத்தில் ஒளிகொடுத்த*
*போது - பிறந்த - மாது!*

*தீட்டியதோர் காவியத்தின் தோற்றம் - ஆண்டு*
*சென்றாலும் அதிலில்லை மாற்றம் - நெஞ்சில்*
*பூட்டியதோர் முத்தாரப்*
*புன்சிரிப்பும் போதையினை*
*மூட்டும் - சுகம் - கூட்டும்!*

*மருக்கொழுந்து மணக்கின்ற சோலை - மேனி*
*மஞ்சள்நிறம் தந்ததந்தி மாலை - வாழைக்*
*குருத்துப்போல் சுருண்டிருக்கும்*
*குழல்மீது குடியிருக்கும்*
*மேகம் - ஊட்டும் - மோகம்!*

சித்தத்தில் மதுவூறச் செய்வாள் - என்
சிந்தனையைப் பாட்டாக நெய்வாள் - நல்ல
தித்திப்புச் சுவையொழுகும்
தேன்பாகைப் பெற்றதவள்
அங்கம் - உருகாத் - தங்கம்

மின்வீச்சை நானோர்நாள் கண்டேன் - அதை
மிஞ்சிவிட்ட திவள்பார்வை என்றேன் - வண்ணப்
பொன்பூச்சுக் கன்னத்தைப்
பூம்பட்டுப் போல்தொட்டுப்
பார்த்தேன் - சுகம் - சேர்த்தேன்!

கண்வீச்சைக் காட்டிவிட்டாள் பாங்காய் - நானும்
கதிர்மறைய வரச்சொன்னேன் பூங்கா - இன்னும்
என் மூச்சில் உயிரில்லை
இன்றவளின் சுகப்பாடம்
கேட்டு - சொல்வேன் - பாட்டு!

●

# சரியான அறைகூவல்

இத்தாலி நாட்டினிலோர் அறமன் றத்தில்
    இமையசைந்தால் ஒலிகேட்கும் அமைதி; ஆங்கே
முத்தாரப் பேரழகி, வண்டுக் கூட்டம்
    முத்தமிடும் அல்லிப்பூ முகத்துக் காரி
சித்திரத்தின் பாவனைபோல் குற்றக்கூண்டில்
    சிரித்தபடி நின்றிருந்தாள்; கிளிகள் வந்து
முத்தமிட்ட கனியுதட்டுக் காரி அந்த
    மோகனமோ ஒருவிதவை ஆனால் வேசி!

*பொற்புடைய அறமன்றத் தலைவ ரேறே!*
*பூவழகி இவள்வேசி; மோகக் கண்ணைச்*
*சுற்றவிட்டுச் சுற்றவிட்டே இளைஞர் நெஞ்சைச்*
*சுட்டெரித்த கைகாரி; காமப் பாடம்*
*கற்றறிந்த மங்கையிவள் சமுதா யத்தில்*
*கள்ளியென முளைத்தெழுந்த விதவை; வேசி.*
*குற்றத்தில் முதற்குற்றம் புரிந்தாள்; சற்றும்*
*குறையாத தண்டனைதான் கொடுக்க வேண்டும்!*

*வழக்கறிஞர் உரைகேட்டுத் துயரக் கண்ணீர்*
*வடிக்கவில்லை பேரழகி! முதிர்ந்த வாழைப்*
*பழக்குலைபோல் தலைதாழ்த்தி நின்றா ளில்லை*
*பாட்டுரைக்கும் கண்களினால் அவையைப் பார்த்து*
*விளக்கங்கள் படிக்கின்ற விடையைச் சொன்னாள்*
*வேட்டொலியால் மிரண்டோடும் கன்றைப் போலக்*
*குழப்பத்தில் ஆழ்ந்தார்கள் அவையோர்; அந்தக்*
*கோமளமோ ஒரு கேள்விக் குறிபோல் ஆனாள்!*

*எனைவிதவை என்றீர்கள் ஏற்றுக் கொள்வேன்!*
*என் கணவர் முதலிரவில் என்னைத் தொட்(டு)*
*அணைத்திட்ட கரம்சற்றே அகலும் முன்னே*
*ஆவிபறி போனதனால் விதவை யானேன்!*
*மனைவிளக்கென் கூந்தலிலே வைத்த பூவை*
*மணவாளன் பிணக்குழியில் அறுத்துப் போட்டேன்*
*சுனைக்குவளை போலிருந்த கன்னிப் பூநான்*
*சுட்டெரிக்கும் பாலையிலே கருகி வீழ்ந்தேன்!*

*காட்டுமல்லிப் பூவாய்த்தான் வாழ்ந்து வந்தேன்*
*கண்மூடிச் சமுதாயம் காமக் கையை*
*நீட்டியதால் நிலைகுலைந்தேன்; விதவை என்பால்*
*நெஞ்சுருகி எவரேனும் எனக்கு மாலை*
*போட்டிருந்தால் புதுவாழ்வில் பூத்தி ருப்பேன்*
*பொன்னுக்குப் புழுதியிலே என்ன வேலை?*
*தீட்டியதோர் காவியம்தான் திருடு போனேன்*
*தீயவளா நான்? அல்ல சமுதா யந்தான்!*

*சுரங்கப்பொன் என்றென்னைச் சுற்றி வந்து*
*சுவைக்கனியைத் தரச்சொல்லிக் கண்ணால் பேசும்*
*வரங்கிட்ட லாகாதா என்றே எண்ணி*
*வத்தியெனக் கரைந்துருகிப் பின்னால் ஓர் நாள்*
*மரமாம்என் உடலேறி இன்ப மென்னும்*
*மாங்கனியை முத்தமிட்டுச் சுவைத்தும் என்னைத்*
*தரமில்லாள் எனக்கூறும் தருக்கர் வாழும்*
*சமுதாயம் மணல்வீடாய்ச் சரிந்தா லென்ன?*

*வெண்முல்லைச் சரமொன்றைக் குரங்கின் கையில்*
*விளையாடத் தந்தவர்கள் அறுந்த பின்னர்*
*கண்ணீரை வடித்தாராம் அதுவு மன்றிக்*
*காப்பாற்றிக் கொள்ளாத மாலை என்றே*
*எண்ணில்லாக் குற்றத்தை மாலை மீதில்*
*ஏற்றினராம் இந்நிலைதான் எனக்கும்; நெஞ்சப்*
*புண்களிலே வடிகின்ற குருதிக் கண்ணீர்*
*புரியாத தத்துவமாய்ப் போன தேன்ஏன்?*

*வானிருக்கும் நிலவென்றார் என்னை, இன்றோ*
*வந்துதித்த சாபக்கே டென்றார்; பூவின்*
*தேனிருக்கும் கிண்ணந்தான் கன்னம் என்றோர்*
*தீப்பட்ட புண்ணென்றே திருத்திச் சொன்னார்*
*மீனிருக்கும் கண்களெனச் சொன்னோர் இன்றோ*
*மீளாத நஞ்சிருக்கும் கோப்பை என்றார்*
*கூனிருக்கும் புருவமெனப் புகழ்ந்து சொன்னோர்*
*கொடுநஞ்சுப் பாம்பெடுத்த படந்தான் என்றார்*

*அலையாடுங் கடல்போல அமைதி குன்றி*
*அழுகையெனுங் கவிபாடி வாழ்ந்த என்னைக்*
*கலைராணி என்றார்கள் என்னைக் காமக்*
*கடலுக்குள் இழுத்தார்கள்; விதவை என்னை*
*வலைவீசிப் பிடித்தார்கள், ஆனால் தூய*
*வாழ்வளிக்க வரவில்லை நானும் சற்று*
*விளையாடிப் பார்ப்போமே என்றே இந்த*
*வித்தையிலே தேர்ந்தேன்பின் என்னை விற்றேன்!*

*சிந்தித்தேன் அதையும்நான் செய்வதுண்டு*
*சீரழிந்த சமுதாயம் என்னைக் கண்ணீர்*
*சிந்தத்தான் செய்ததன்றி எனக்கு வேறு*
*சிரிப்பேதும் தரவில்லை; சமுதா யத்தில்*
*மந்தமதி உள்ளவர்கள் வலையில் என்னை*
*மாட்டிவிடச் செய்தார்கள் நானும் வாழ்வில்*
*பந்தயமும் இட்டிந்தச் சமுதா யத்தைப்*
*பழிவாங்கத் துணிந்திட்டேன் தவறா? இல்லை!*

சிதையோடு கனவாகிச் சிதைந்து போகும்
    சீர்கெட்ட என்னுடலில் பொதிந்து நிற்கும்
சதைக்காகத் தான் தீய சமுதா யத்தார்
    சரசவலை வீசினரே அதனை விட்டுக்
கதைக்கின்றீர் எனைக்கணிகை என்றீர் நானும்
    கருகிவிட்ட பூவானேன் என்னைப் பார்த்துச்
சதைக்கொய்யா என்றவர்கள் எனக்கு வாழ்வு
    தந்திருந்தால் நல்வாழ்வில் திளைத்தி ருப்பேன்!

அறமன்றப் பெரியோரே! என்னைக் காண
    ஆசையுடன் வந்தோரே! கொடுமை செய்யப்
புறப்பட்ட நெஞ்சுகளே! எனக்கு மட்டும்
    புதுச் சட்டம் சொல்வோரே! கட்டிவைத்த
சரமுல்லை போலிருக்கும் எந்தன் மேனி
    சாய்வதற்குள் சமுதாய உணர்ச்சி அற்ற
மரப்பட்டை உள்ளங்கள் மாள வேண்டும்
    மறக்காத சரிதத்தில் இடமும் வேண்டும்!

அச்சமின்றிப் பேசுகிறேன் ஆமாம்! இந்த
    அறமற்ற சமுதாயம் அழிய வேண்டும்
நிச்சயமாய் வஞ்சகத்தை மாய்த்தா லன்றி
    நீசர்தம் நெஞ்சங்கள் ஆட்டம் போடும்!
பச்சரிசிப் பல்லழகு விதவைக் கூட்டம்
    படுகுழியில் விழவேண்டாம் வாழ்வு வேண்டும்!
எச்சரிக்கை செய்தபடி இங்கே சாபம்
    இடுகின்றேன் சிரிக்காதீர்; பலிக்கும், உண்மை.

வஞ்சகத்தை வரவேற்று நெஞ்சில் தேக்கி
        வாழ்நாளில் விளையாடப் புகுந்தோர் நாட்டில்
அஞ்சித்தான் வாழ்ந்திருந்தேன் ஒருநாள் என்றன்
        ஆட்டமதும் ஓய்ந்துவிடும் என்றே இன்று
நஞ்சருந்தி வந்துள்ளேன் உலக வாழ்வு
        நாடகத்தை முடிக்கின்றேன் என்றே சாவின்
மஞ்சத்தில், மன்றத்தில் வீழ்ந்தாள் ஆங்கே
        மறுவார்த்தை ஏதுமில்லை மௌனம், மௌனம்!

பெருகிவரும் கண்ணீரை இமையால் மூடிப்
        பேதைமகள் சொன்னமொழி கேட்டுக் கேட்டே
உருகிவரும் நெஞ்சுக்குள் உதிரக் கண்ணீர்
        உகுத்தார்கள் அங்கிருந்தோர் அவளின் வாழ்வு
தருகின்ற பாடமெலாம் உலகத் திற்குச்
        சரியான சாட்டையடி ஆக வேண்டும்!
வருகின்ற தலைமுறையின் வாழ்வைக் கொஞ்சம்
        வகுப்பதற்குத் துணைநிற்கும் அவளின் காதை!

கருகிவிட்ட காவியந்தான்; அவளின் வாழ்வைக்
        கண்ணீரால் தானெழுத வேண்டும்; தீயில்
உருகிவிட்ட மெழுகானாள் ஆனால் நெஞ்சில்
        ஒளிவீசும் அவளுருவம்; தேகம் தன்னை
விருந்தாகத் தந்தமகள் காலத் தீயில்
        வெந்தழிந்து போனாலும் அவளின் மேனி
சருகாகிப் போனாலும் அவளின் வாழ்வு
        சரியான அறைகூவல் சரிதத் திற்கு!

●

# அமைதி

பூக்காடாய் நெஞ்சில் புதுமணத்தைத் தந்தெனக்குப்
பாக்காடாய் மாறிவிட்ட பைந்தமிழே! - சாக்காடு
போனாலும் அங்குமுனைப் பொன்மகளே! - என்நெஞ்சம்
தேனாகப் பாடும் தினம்

அன்பினைத் தேடிச் சென்றேன்
அன்னையால் கண்டு கொண்டேன்
பொன்னினைத் தேடிச் சென்றேன்
புதையலால் பெற்றேன்; கொஞ்சம்
இன்பமும் வேண்டும் என்றேன்
ஏந்திழை அவளால் பெற்றேன்
என்னுளே அமைதி தேடி
இருக்கிறேன் அறிந்தே னில்லை.

*கடலிலே முத்தை வைத்தான்*
*காதலில் துன்பம் வைத்தான்*
*மடலிலே மணத்தை வைத்தான்*
*மங்கையில் சுகத்தை வைத்தான்*
*உடலிலே உயிரை வைத்தான்*
*உளந்தனில் ஆசை வைத்தான்*
*இடரினை எனக்கு வைத்தான்*
*எங்குதான் அமைதி வைத்தான்?*

*எண்ணிலாத் துன்ப வேல்கள்*
*என்னுளே பாயும்; நெஞ்சப்*
*புண்களை ஆற்றும் கண்ணீர்*
*போக்குமென் துயரை என்றே*
*என்னுளே அழுதேன்; கண்கள்*
*இருண்டிட அழுதேன்; ஆனால்*
*என் மனம் தேடி நிற்கும்*
*ஈடிலா அமைதி எங்கே?*

*காற்றெழும் கடலின் ஓரம்*
*கனிமலர்ச் சோலை ஓரம்*
*ஊற்றெழும் மலையின் ஓரம்*
*ஓடினேன்; ஆனால் நெஞ்சம்*
*போற்றிடும் அமைதி மட்டும்*
*புலப்பட வில்லை; நெஞ்சில்*
*ஏற்றிய சுமையால் என்னுள்*
*ஏங்கினேன் அமைதி எங்கே?*

கண்ணிலே காட்சி தேக்கம்
    கரும்பிலே சாற்றின் தேக்கம்
விண்ணிலே முகிலின் தேக்கம்
    வேதனை நெஞ்சில் தேக்கம்
மண்ணிலே கடலின் தேக்கம்
    மனிதரில் வஞ்சம் தேக்கம்
என்னுளே துன்பம் தேக்கம்
    எங்குதான் அமைதி தேக்கம்?

பஞ்சினில் நெருப்பு பற்றிப்
    பரவிடும் நிலைபோல் என்றன்
நெஞ்சினில் துயர மென்னும்
    நெருப்புதான் எரியும் போது
கொஞ்சமாய் உடலி லுள்ள
    குருதியும் கொதிக்கும் போது
துஞ்சிடா இமைகள் என்னைத்
    துளைத்திடும் அமைதி எங்கே?

தேடினேன் தேடித் தேடித்
    திணறினேன்; பாட்டுத் தேரில்
ஓடினேன்; அமைதி மட்டும்
    உளந்தனில் சேர வில்லை
வாடினேன்: பித்தன் போல
    வாழ்கிறேன்: துடிக்கும் நெஞ்சம்
தேடிடும் அமைதி எங்கே?
    திருடுபோய் விட்ட தாமோ?

*கண்ணிலே அமைதி என்றார்*
*கண்ணீரும் சொரிந்து பார்த்தேன்*
*பெண்ணிடம் அமைதி என்றார்*
*பெண்ணையும் காதல் செய்தேன்*
*பொன்னிடம் அமைதி என்றார்*
*பொருளையும் குவித்தேன்; ஆனால்*
*என்மனம் தேடி நிற்கும்*
*ஈடிலா அமைதி எங்கே?*

*உலகமே முள்ளாய் என்னை*
*உறுத்திடும் போது, துன்பக்*
*கலக்கமே எனது சொத்து*
*கடனெனக் கேட்பா ரில்லை*
*மலரெனும் உள்ளம் வாட*
*மௌனமாய் அழுதேன்; என்னை*
*விலங்கிடும் துன்பந் தன்னை*
*விலக்கிடும் அமைதி எங்கே?*

*எதிலுள தமைதி என்றே*
*இன்றுதான் கண்டேன்; வாழ்வுக்*
*கதையினை முடித்து நல்ல*
*கனவுல கடையும் மேனி*
*சிதையினில் எரிந்தபோது*
*சிரிப்பதில் அமைதி கண்டேன்*
*அதனையே அமைதி என்பேன்*
*அங்குதான் அமைதி தேக்கம்!*

*தொல்லைகள் வெறுத்தே இந்தத்*
*துயருல கறுத்த மேனி*
*கல்லறைக் குள்ளே பாடும்*
*கவிதையில் அமைதி தேக்கம்!*
*வல்லமை பெற்றும் வாழ்வில்*
*வளம்பல பெற்றும், நெஞ்சில்*
*இல்லையே அமைதி என்போர்*
*இறப்பினில் புரிந்து கொள்வர்!*

●

(4.7.71 இல் சென்னைக் கடற்கரைக் கவியரங்கில் அரங்கேற்றப் பெற்ற கவிதை)

# தீயிலே கருகிய தேன்மலர்

மோகச் சிலையொன்று மூட்டிய காதலெனும்
வேகத்தில் சிக்கி விழியிழந்து - சோகத்தில்
வீழ்ந்த துயரத்தால் வெம்பித் துடிக்குமிது
பாழ்பட்ட நெஞ்சத்தின் பாட்டு!

(வேறு)

பாலாடைப் பூமேனி பாவையவள் கண்ணிரண்டில்
சேலாடும் கோலம் சிரிக்கும் பருவமகள்

பட்டுத் துணிமீது பால்போலும் செண்பகப்பூ
இட்டுத் தொடுத்த எழில்போல் இளம்பாவை

தொட்டுப் பெறும் சுகத்தைத் தோகைமயில் தன்னிரண்டு
சுட்டு விழியசைவில் சொல்வாள் எனைவெல்வாள்

தங்கநிறச் செங்கமலம் தந்ததவள் அங்கங்கள்
செங்குமுதக் கண்கள் சிரிக்கும் நளினமுகம்!

கோமளப்பூப் போன்ற குளிர்சோலைச் செல்வியவள்
மாமதுரைத் தேன் தமிழ்தான் மஞ்சத்தில் மல்லிகைதான்!

*ஆணிப்பொன் முத்தாடும் அம்பொற் சிலையழகி*
*மாணிக்கக் கல்லிணைத்த மாளிகையின் தேவமகள்*

*நாணிக்கண் மூடுகையில் நங்கையவள் கன்னம், செவ்*
*வானிருக்கும் வண்ணமென வார்த்தெடுத்த பொன்னாகும்!*

*செண்டுதந்த மென்மை; சிரிக்கின்ற செவ்வாழைத்*
*தண்டுவந்த பொன்மேனி; தாவிக் கடல்மூழ்கிக்*

*கொண்டுவந்த நல்முத்து; கொஞ்சும் இளஞ்சோலை*
*வண்டுதந்த பூங்கண்கள்; வானத் திரைமீது*

*கண்டுவந்தம வெண்ணிலவு, காதில் தமிழ்கூட்டி*
*விண்டுவந்த தேன்கவிதை; வெண்ணிலவுக் கன்னி.*

*விரிக்கும் கவியில் விளங்கும் சுவையாய்ச்*
*சிரிக்கும் சிலையொன்று செந்தூரத்தை நெற்றியிலே*

*கச்சிதமாய் இட்டு கனகமணித் தேர்மீது*
*மெச்சும் வகையில் மிளிர்ந்தாடும் பாவனைபோல்*

*என்னெதிரே வந்தே இனிக்கும் சுவைச்சிந்து*
*கன்னலெனத் தந்து', கவிநெஞ்சைத் தொட்டிழுப்பாள்.*

*மாமயிலின் தோகையவள் மாங்காட்டுப் பூங்குயிலாள்*
*தாமரையின் மொட்டுக்குள் தங்கிநட மாடுந்தேன்!*

*மீட்டும் எழில்வீணை காட்டும் இசைக்குயிலின்*
*பாட்டுத் தலைவியவள் பார்த்தால் கலைமயக்கம்*

*உண்டாக்கி நெஞ்சை ஒடித்துப் பலநூறு*
*துண்டாக்கிப் போகும் துடையிடையாள் தேன்கொடியாள்!*

*அன்னவளே என்னுயிரை ஆக்கியவள் என்றெண்ணிப்*
*பொன்மயிலாள் இல்லையெனில் போய்விடுமென் ஆவியென*

*நம்பிக் கிடந்து நலமழிந்(து) என்னுள்ளே*
*வெம்பித் துடிதுடித்து வேதனையால் வெந்ததனை*

*மோகக் கவியிது முழக்கும் எனினுமிது*
*சோகக் கவியென்றே சொல்!*

(வேறு)

*எதிர்வீட்டு மாடியிலே நின்றே; பாதி*
*இமைமூடிப் பார்த்திடுவாள்; இதழின் ஓரம்*
*புதிர்போட்டு நகைத்திடுவாள்; புதுமை செய்வாள்*
*புத்தமுதை நெஞ்சுக்குள் பொழியச் செய்வாள்*
*அதிர்வேட்டு வெடிக்கின்ற என்றன் நெஞ்சை*
*அல்லிப்பூந் தென்றலெனத் தொட்டாள்; காதல்*
*சுதிபோட்டுப் பாடுகின்ற பாவை மேனி*
*தொட்டவுடன் சுகக்கவிதை பாடும் வீணை*

*சிரித்தாளே தென்பாண்டிக் கடலின் முத்தாய்*
*செய்தாளே எனையிந்த உலகில் பித்தாய்*
*விரித்தாளே மாங்குயிலின் பாடங்கேட்டு*
*வெண்முல்லைச் சோலையிலே காதல் பாட்டு!*
*பறித்தாளே என்நெஞ்சப் பூவைக் கள்ளி*
*பருவமகள் அவள்தான்என் இன்பப் பள்ளி!*
*குறித்தாளே எனைமட்டும் பார்வை கொண்டு*
*கொலை செய்யும் எண்ணத்தால் முல்லைச் செண்டு!*

*அன்றொரு நாள் ஏடொன்று வேண்டும் என்றே*
*அழகுமயில் நடமிட்டு வந்தாள்; தேனைக்*
*கண்டவன்போல் களித்தேன்; பின் பேசி விட்டேன்*
*கண்ணாலே சொலும்பேச்சு காதல் பேச்சு*
*பெண்ணழகி தனைநெருங்கி ஏட்டைத் தந்து*
*பெயரென்ன எனக்கேட்டேன் பெயரைச் சொன்னாள்*
*மின்வெட்டுச் சிரிப்பொன்றைத் தந்தாள்; வீணை*
*மீட்டிவிட்ட தொனியென்றேன் பறந்தே போனாள்!*

*கண்மூடிப் படுத்தாலும் அவள்நி னைப்பு*
*கல்லூரி சென்றாலும் அவள்நி னைப்பு*
*விண்மூடி விளையாடும் முகிலைப் போலே*
*விழியழகி என் நினைவை மூடி, இன்பப்*
*பண்பாடி வருவதுபோல் ஒருநி னைப்பு*
*பக்கத்தில் இருப்பதுபோல் ஒருநி னைப்பு*
*மண்மூடிப் போனாலும் அவளை என்றன்*
*மனதகற்ற இயலாத ஓர்இ ணைப்பு!*

(வேறு)

*வெண்ணிலாச் சிரிப்பை விதைக்கும் தேனரசி*
*என்னுள்ளே காதல் எனும்வித்தைத் தூவிவிட்டாள்*

*அன்பென்னும் அவ்வித்து அன்னவளின் பார்வையெனும்*
*தண்ணீரால் முளைத்துத் தளிர்க்காதல் கொடியாகி*

*சீதளத் தேனைச் சிந்துகின்ற நேரமது*
*போதவிழக் காத்திருக்கும் பொன்வண்டாய் நானும்*

*காத்திருந்தேன் காலம் கனியுமென்று பார்த்திருந்தேன்!*
*பூத்தமலர் அவளைமனப் பொன்வீட்டில் பூட்டிவைத்தேன்!*

*வந்துவிடும் நற்காலம் வனக்கிளியை என்கையில்*
*தந்துவிடும் என்றே தவியாய்த் தவித்திருந்தேன்!*

*வந்ததடா காலமெனை வாழ்விக்க வரவில்லை*
*செந்தீயில் என்நெஞ்சைத் தீய்த்துவிட வந்ததடா!*

*அன்னவளை என்னவளாய் ஆக்கிவிட நாள்பார்க்கும்*
*பொன்செய்தி எதிர்பார்த்துப் பொங்கிநின்ற என்னெஞ்சம்*

*மின்செய்தி கண்டு மிரண்டு தவித்ததடா!*
*அன்பைச் சொரிந்தென்னை ஆட்கொண்ட என்பாட்டன்*

*மாண்ட கதைகேட்டு மனங்கலங்கி நின்றிட்டேன்*
*தேன்மகளைக் கண்டு செய்தியினைச் சொல்லி நின்றேன்*

*மொழியெழவே நாவின்றி முத்தழகி தனைநோக்கி*
*விழியசைவில் விடைகேட்டேன் வெண்ணிலவுக் கண்ணழகி*

*"பேதையெனைப் பிரிகின்றீர் பேரழகே! ஈழத்தில்*
*சீதையென நானுமிங்கே சிந்தை கருகி நிற்பேன்*

*கோதை மகளிங்கே கொதிநீரில் மீனாவேன்!*
*ஏதுரைப்பேன் இனி" யென்றாள் இருவிழியில் அருவிவர*

*பட்டுக் கன்னத்தைப் பரிவோடு நான் தடவி*
*எட்டு முத்தங்கள் இதமாகப் பரிசளித்தேன்*

*பிரிந்தேன் பெண்ணழகை, பிரிவென்னும் கொடுந்தீயில்*
*எரிந்தேன் ஆமாம் எனதுயிரை அவளிடத்தே*

*தந்துவிட்டுச் சென்றேன் தங்கமகள் மணி இதழின்*
*சிந்துதனைக் கேளாத சிறப்பிழந்து செல்கின்றேன்!*

(வேறு)

*ஓரிரு திங்க ளின்பின்*
*ஊரினில் கடன்மு டித்து*
*மீறிடும் ஆவல் கொண்டு*
*மிழற்றிய யாழின் பாட்டுக்*
*கூறிடும் அவளைக் காணக்*
*குதித்திடும் பந்தைப் போலக்*
*காரிருள் கிழித்தெ ழுந்த*
*கதிரெனத் திரும்பி வந்தேன்!*

*ஓவியப் பாவை பார்வை*
*உரைத்திடும் மொழியைக் கேட்க*
*ஏவிய அம்பைப் போலே*
*எழுந்துநான் விரைந்து சென்றேன்*
*காவியக் கனியை அன்று*
*கண்ணெதிர் கண்டேன்; என்றன்*
*ஆவியுந் துடிக்கக் கண்டேன்*
*அனலிடைத் தளிராய்ப் போனேன்!*

*பன்னீரில் ஊறி நின்று*
*பாட்டெனக் குரைத்த முல்லை*
*கண்ணீரில் நிற்கக் கண்டேன்*
*கருகினேன்; கலங்கிப் போனேன்*
*பொன்னாடும் மங்கை நல்லாள்*
*பொசுங்கிய பூவாய் நின்றாள்*
*பண்ணூறும் இதழின் மீது*
*படிந்ததோர் துயரங் கண்டேன்!*

*மாம்பழக் கன்னம் இன்று*
*மலர்நிறம் இழந்த தேனோ?*
*தீம்பலாச் சுளைச்சி ரிப்பு*
*திருடுபோய் விட்ட தாமோ?*
*பூம்பதம் பெற்று நின்ற*
*பொன்னிறம் எங்கே? எங்கே?*
*கூம்பிய அல்லிப் பூவாய்*
*குளிர்நிலா கருகி நின்றாள்!*

*ஏணிந்தக் கோல மென்றே*
*இருவிழி யசைவில் கேட்டேன்*
*மானினந் தந்த கண்ணை*
*மறைத்தது கண்ணீர் மேகம்*
*தேனிதழ் திறந்து சொன்னாள்*
*தீயடா தீயில் வீழ்ந்தேன்*
*மீனினம் சுடுமண் ணின்மேல்*
*மிதந்தது போல்து டித்தேன்*

ஐயகோ! காலக் கூத்தே
அறிவுனக் குண்டா; இல்லை!
மையலைத் தந்து நின்ற
மலரினை மருக்கொ ழுந்தை
நெய்கமழ் பாகை இன்று
நெருப்பினில் தீய்த்து விட்டாய்!
துய்யநல் மணியை எங்கோ
தூரநீ எறிந்து விட்டாய்!

பொன்மகள் சொன்ன காதை
பொசுக்குதே நெஞ்சை; என்றன்
கண்மணி போலே நின்ற
காவியப் பாவை ஓர்நாள்
நன்மணம் செய்யப் பெற்றாள்
நாயகன் மறுநாள் மாண்டான்
வெண்ணிலாச் சிரிப்புக் காரி
விதவையாய்ப் போனாள் ஐயோ!

கன்னலும் தீக்காட் டுக்குள்
கருகிடும் போது; நெஞ்சம்
கிண்ணெனக் கனத்துச் சோக
கீதமே பாடும் போது
பொன்னெனும் செல்வம் காலப்
புயலிலே போன போது
என்னயான் சொல்வேன் ஓ! ஓ!
என்கவி அழுத போது.

*நெஞ்சமும் துடிது டிக்க*
*நிம்மதி எனைம றக்க*
*அஞ்சன விழியாள் நெஞ்சம்*
*ஆலையின் கரும்பாய் ஆகக்*
*கொஞ்சமும் கருணை இல்லாக்*
*கொடுமன விதியே! என்னை*
*வஞ்சனை செய்து விட்டாய்*
*வாழ்வுனக் கில்லை ஆமாம்!*

*துடிக்கிறேன்; துன்பத் தாலே*
*துவள்கிறேன்; சோகக் கண்ணீர்*
*வடிக்கிறேன்; உயிர்ப்பி ரிந்தும்*
*வாழ்கிறேன்; சோகப் பாட்டுப்*
*படிக்கிறேன்; அவளை நெஞ்சில்*
*பார்க்கிறேன்; அவளைப் பாட்டில்*
*வடிக்கிறேன்; அவளை எண்ணி*
*வாழ்வதால் இளைத்துப் போனேன்!*

(வேறு)

*ஓவியமாய் நெஞ்சின் உணர்வுள்ளே ஒன்றிவிட்ட*
*காவியமாய் நிற்கின்றாள் காரிகை - ஆவி*
*எனைவிட்டுப் போனாலும் என்னெஞ்சில் என்றும்*
*மனைகட்டி வாழ்ந்திடுவாள் மாது!*

●

# விடுதலைத் திருநாள் வெள்ளிவிழா

*அந்திமலர் சிந்திவிழும் விந்தைமிகு இந்தியமே!*
*அழகுமண வெள்ளிவிழா உனக்கு - இங்கே*
*சிந்தையிலே அத்தனையும் சித்திரம்போல் நிழலாடச்*
*செங்கவியில் பார்க்கின்றேன் கணக்கு*

*மேகமெனப் பந்தலிட்டு மின்னலெனுந் தோரணங்கள்*
*மிதந்தாடும் பேரழகு பார்த்து - அன்று*
*மோகனப்பூங் கன்னியர்கள் முத்திழைத்த பட்டுடுத்து*
*முன்நடந்தார் கைவளைகள் ஆர்த்து*

*துள்ளியுலா வந்தநிலா சொர்க்கமெலாம் இந்தியத்தில்*
*சூழ்ந்ததுவா என்றுபனி சொட்டும் - இந்த*
*வெள்ளிவிழா எழில்கண்டு அல்லியெலாம் மெல்ல மெல்ல*
*விண்ணிலவைக் கண்டுவிழி கொட்டும்*

*நாடுமுற்றும் நல்லவிழா நாமெடுத்தோம்! மிகச்சரிதான்*
*நளினமலர் போலின்பம் கொய்தோம் - ஆனால்*
*பாடுபட்டுக் கூடுகெட்(டு) ஓடுமட்டும் மீதமென்ற*
*பாட்டாளிக் கென்னவழி செய்தோம்?*

*உச்சிவெயில் வேளையிலும் உயிர்கருக ஏழையவன்*
*உழைக்கின்றான் அதைநாடே அறியும் - ஆனால்*
*மெச்சுகின்ற விடுதலைக்கு வெள்ளிவிழா எனச்சொன்னால்*
*மீதமென்ன அவனுக்குத் தெரியும்?*

*கண்டுவிட்ட விடுதலைக்குக் கால்நிறுத்தி வைத்தவர்க்குக்*
*கவிதையிலே நன்றிகளைக் கொடுத்தோம் - ஆனால்*
*தொண்டுசெய்து விடுதலையைத் தோளேற்றிச்சுமப்பவரின்*
*சுகங்கேட்க நாம்மறந்து விடுத்தோம்.*

*துள்ளிவிழுங் கண்ணீரைத் துடைக்கவொரு துணியின்றித்*
*துயர்படுவோர் நம்மிடையே பாதி - இங்கே*
*வெள்ளிவிழா தீபங்கள் வீதிவழி ஆடியொளி*
*வீசுவதில் என்னவுண்டு நீதி?*

*மிதியடிபோல் தேய்ந்தேனும் மேனாட்டார் முப்பொழுதும்*
*மேனிநலம் பாராமல் உழைக்க - நாமோ*
*மிதி! அடி! என் றேநாளும் வீண்கூச்சல் இட்டபடி*
*விழிப்பதனை எந்தவிதம் உரைக்க?*

*எந்தவொரு தத்துவத்தை எதிர்நோக்கி விடுதலையை*
*எம்தலைவர் அப்போது பெற்றார் - ஆமாம்!*
*அந்தவொரு தத்துவத்தின் அறவழிதான் என்னவென்றே*
*ஆரின்று மிகத்தெளிவாய்க் கற்றார்?*

*இங்கிதமாய் விடுதலைக்கே இனியதங்க விழாவருமுன்*
*ஏழைக்கு நாம்தருவோம் சிரிப்பு - இன்பத்*
*தங்கமணிப் பாரதந்தான் சரித்திரத்தை வகுத்ததென்று*
*தரவேண்டும் புவியேட்டுக் குறிப்பு!*

●

# அறிஞர் அண்ணா
# ‘திருத் தசாங்கம்’

(நேரிசை வெண்பாக்கள்)

(பெயர்)

*மழலை மொழிக்கிளியே! மன்னவனின் தூய*
*அழகுப் பெயரை அறிவி - பழச்சாறாய்ச்*
*சொன்னாலும் தேனின் சுவையொழுகும் அப்பப்பா!*
*அண்ணா துரையென்றே ஆடு!*

(நாடு)

*அன்புப் பசுங்கிளியே! ஆடகப்பொன் மன்னவனின்*
*இன்பமிகு நாட்டை இயம்பிடு - மென்தும்பி*
*பூவாடத் தேன்வழியப் பொன்மழைஎன் றஞ்சிவிடும்*
*சாவாத் தமிழகமே சாற்று!*

(நகர்)

*சீரெல்லாம் செப்பும் செழுங்கிளியே மன்னவனின்*
*ஊரென்ன கொஞ்சம் உரைத்திடு - வேறென்ன!*
*மாஞ்சோலைப் புள்ளும் மலர்த்தமிழைப் பாடிவரும்*
*காஞ்சியே அண்ணனூர் காண்!*

(ஆறு)

*பாடுங் கிளியே! பழந்தமிழாய் நெஞ்சத்தில்
ஆடுந் தலைவனவன் ஆறென்ன? - பாடும்
பழகு தமிழ்படித்த பால்மழலை வேந்தன்
அழகுக் கவிமொழியே ஆறு!*

(மலை)

*சின்னஞ் சிறுகிளியே! சீதளப் பாட்டிசைத்த
மன்னவன் கொண்ட மலையென்ன? - பொன்னனைய
தாளாப் பெருமை தமிழ்போலச் சேர்ந்ததவன்
மாளாப் புகழே மலை.*

(ஊர்தி)

*சீர்பாடும் கிள்ளாய் செழுந்தமிழ் வேந்தனவன்
ஊர்தியின் பேரை உரைத்திடு - சீர்நல்கும்
பூந்தமிழைப் போற்றிப் புதுக்கவிகள் பாடிவரும்
தீந்தமிழ் நெஞ்சமவன் தேர்*

(படை)

*சந்தக் கிளியே! சரித்திர நாயகனின்
சொந்தப் படையென்ன? சொல்லிவிடு! - பந்தைப்போல்
எம்பிப் பகைவர் இடுப்பொடிக்கும் மன்னவனின்
தம்பிப் படையதுவே தான்!*

(முரசு)

*முத்துக் கிளியே முரசின் பெயர் சொன்னால்
சித்தங் களித்திடுவேன் செப்பிடு - வித்தகர்க்கு
நாவால் ஒலியெழுப்பி நாட்டில் படைதிரட்டும்
மூவாத் தமிழே முரசு.*

(தார்)

*இன்கிளியே! எங்கள் இதயத்தில் பண்ணிசைக்கும்*
*தண்டமிழ் வேந்தனவன் தாரென்ன? - தென்புலவர்*
*பாட்டு மலர்தொடுத்த பைந்தமிழாம் மாலையினைச்*
*சூட்டுவ ராமென்றே சொல்!*

(கொடி)

*பாட்டு மொழிக்கிளியே! பார்புகழும் வேந்தனவன்*
*நாட்டுங் கொடியை நவின்றிடு - நாட்டினில்*
*சுற்றும் பகையைச் சுழன்றாடி ஏற்றிடுவான்*
*வெற்றிக் கொடிதான் விளம்பு!*

●

# அந்த மெழுகுவத்தி அணைந்துவிடட்டும்

*பகலுறங்கும் ஓரிரவில் பனிமென்மைப் பஞ்சணையில்*
*அகல்விளக்கின் வெளிச்சத்தில் அவள் ஆவி துடிக்கிறது.*

*காசிவரை சென்றாலும் கைகழுவாப் பழிபுரிந்து*
*வேசியென நால்வருக்கு விளங்கிவந்த நளினமகள்*
*கண்சிமிட்டும் வெளிச்சத்தில் கட்டிலிலே கிடக்கின்றாள்.*

*அன்னவளைத் தத்தமது ஆசைக்குப் பங்குவைத்துத்*
*திட்டமிட்டுச் சுகங்கண்ட திருவாளர் நால்வருமே*
*கட்டிலதன் விளிம்பருகே கண்கலங்கி நிற்கின்றார்.*

*மும்மணிகள் இழைத்திருந்த முத்துரதம் இடுப்பொடிந்த*
*பொம்மையெனக் கிடக்கிறது புயல்மூச்சில் நெளிகிறது.*

*முப்பழத்துச் சுவையுடம்பை மோகவெறிக் கைகளிடம்*
*ஒப்படைத்த பெண்பானை உடைந்துவிடப் போகிறது.*

*அடைக்காத கதவிருக்கும் அழகுப்பூஞ் சுரங்கத்தை*
*முடமான சாவுக்கை மூடிவிடப் போகிறது.*

*வெள்ளிமலர்ப் படுக்கையிலே விழுகின்ற ஒளியலைபோல்*
*அல்லிமகள் விரலின்னும் அசையாமல் அசைகிறது.*

பூவிலகும் பாவனையில் பொன்னிமைகள் மெல்லமெல்ல
ஓவியம்போல் நகர்வதனால் உள்விளக்கு தெரிகிறது.

சந்தனக்காற் கட்டிலிலே சந்தனத்தேன் மணம்பொழிந்த
மந்திரப்பூ விழியடியில் மரணநிழல் படிகிறது.
வெள்ளிமணிக் கட்டிலதன் விளிம்பருகே விரல்வைத்துத்
தள்ளிநின்ற நால்வர்மனம் தத்துவத்தில் தவழ்கிறது.

கடைசிஇதழ் உதிருமட்டும் காமமணம் நுகரவைத்து
இடைபழகிக் கொள்ளென்று இருகையைச் சேர்த்துவிட்டுக்
காம்பறுந்து விழப்போகும் காமமலர் நினைவென்னும்
சாம்பலுக்குள் இதயத்தைத் தாலாட்டிப் பார்க்கிறது.

பனிநனைத்து வைத்திருக்கும் பவளமலர்க் கன்னத்தை
இனியெவர்க்கும் தெரியாமல் இருள்மறைக்கப் போகிறது.

நேற்றுவரை மேனியிலே நீந்தஇடம் தந்தமகள்
கூற்றுவனின் வீட்டுக்குள் குடிபோகப் போகின்றாள்.

எட்டுவிழிப் பார்வைகளும் இளைத்தபடி சாய்ந்திருக்கும்
மொட்டுமடல் மேனியிலே மொய்ப்பதனைக் காணுகிறாள்.

நாணத்துச் சோகத்தால் நாக்கிழந்த நால்வரது
மோனத்தைக் கலைப்பதற்கு முனகியவள் நெளிகின்றாள்.

எட்டிநின்ற நால்வருமே இரண்டடிகள் நகர்ந்துவந்து
பட்டுமலர்ப் பாதத்தைப் பாசத்தால் தடவுகிறார்.

மைவடித்த கண்களுக்குள் மயக்கமது தந்தமகள்
மெய்சிலிர்த்துச் சிரிக்கின்றாள்; மெல்லமெல்ல அழுகின்றாள்.

பூமணியின் தோரணங்கள் பூட்டிவைத்த கட்டிலிலே
காமசுகக் காவியங்கள் கண்ணிரண்டில் தோய்ந்துவர
வாடைப்பூங் காற்றுக்கும் வழியில்லை என்றபடி
ஆடைப்போர் செய்கையிலும் அடையாத சுகமொன்று
தப்பாமல் நால்வர்விரல் தடவுவதால் அம்மம்மா
இப்போது கிடைக்கிறதே! இதுதானா தெய்வசுகம்?

*இமைக்கதவை உடைத்துவிட்டு எழுங்கண்ணீர் அலைகளிலே*
*சுமைக்கனவை நீராட்டி, சோகத்தைத் தாலாட்டிக்*
*கிளிப்பச்சைப் பூப்போலக் கிடக்கின்றாள்; நால்வரையும்*
*குளிர்ப்பேச்சால் பேர்சொல்லிக் கோமளம்போல் அசைகின்றாள்.*

*நால்வர்க்கும் பொதுச்சொத்தாய் நாளெல்லாம் இருந்ததனால்*
*பால்நிறைந்த பருவவுடல் பனிபோலத் தேய்ந்தழிந்து*
*போனகதை நால்வருக்கும் புத்தியிலே புரிகிறது*
*தேனளந்த இதழ்மெல்லத் தேம்புவது தெரிகிறது.*

*பூவுக்கு நிறந்தந்த பொன்னுதட்டுக் காரிக்கும்*
*சாவுக்கும் இப்பொழுது சாண்தூரம் தானுளது*
*எப்போதும் புத்தியினை இருட்டறையில் வைத்தவர்க்கு*
*இப்போது ஞானமலர் இதயத்தே பூக்கிறது.*

*கதகதப்பாய் அழுவதற்குக் காரணங்கள் கண்டதனால்*
*இதயஒலி நால்வருக்கும் எழுந்தெழுந்து வீழ்கிறது*
*நேற்றுவரை கிளம்பாத நெகிழ்வலைகள் நால்வரையும்*
*மாற்றிவிட எழுவதனால் மனதர்மம் பிறக்கிறது.*

*விண்மீன்கள்  உதிராத விடிவான விளிம்புகளே!*
*கண்மீது சாய்ந்தாடும் கனவுகளின் நினைவுகளே!*
*மண்ணிலின்று மங்கலநாள் கண்திறந்து பாடுங்கள்!*
*பெண்ணுக்காய் அறமனங்கள் பிறந்தகதை கேளுங்கள்!*

*தொன்றுதொட்டுப் பூத்திருக்கும் தூயமலர்க் கவிதைகளே!*
*இன்றுமட்டும் காத்திருந்து இதை மட்டும் பாருங்கள்!*

*மைக்கருப்புக் கூந்தலினை மண்டியிட்டுக் குனிந்தொருவன்*
*பொய்க்கனவில் பூத்தெழுந்த பூவெனவே வருடுகிறான்.*

*மற்றொருவன் பிறையெடுத்து மாட்டிவிட்ட அன்னவளின்*
*நெற்றியிலே தன்விரலை நீந்தவிட்டுப் பார்க்கின்றான்.*

*வெள்ளிநிலாச் சாயலுக்குள் விழுந்திருக்கும் அவள் விழியில்*
*துள்ளிவருங் கண்ணீரைத் துடைத்தொருவன்  துடிக்கின்றான்.*

*நளினப் பூ மார்பிலிருந்து நழுவிவிட்ட ஆடையினைப்*
*பளிங்குடலில் மற்றொருவன் பதமாகப் போர்த்துகிறான்.*

*எட்டுவிழி சிந்துகின்ற இளஞ்சூட்டுக் கண்ணீரின்*
*சொட்டுகளில் மெல்ல மெல்லத் தோகையுடல் நனைகிறது.*

*ஏக்கஇசை பொழிந்தபடி இருவிழியால் தங்கமகள்*
*நோக்கியதோர் பார்வையிலே நூறுபொருள் தெரிகிறது.*

*அந்தஒரு மணிநேரம் அவள்பெண்ணாய் வாழ்ந்துவிட்டாள்.*
*சிந்தையிலே நிழலாடும் சித்திரம்போல் வாழ்ந்துவிட்டாள்.*

*வேசைமகள் நிலைக்காக வெந்தகண்ணீர் விட்டவர்கள்*
*பூசைமலர் போலின்று புனிதநிலை பெற்றுவிட்டார்.*

*சத்தியத்தின் கோட்டினின்றும் சாணளவும் விலகாமல்*
*தத்துவத்தைச் சுமக்கின்ற தலையினின்றும் இறக்காமல்*
*வாழ்வதுதான் வாழ்க்கையெனில் வகுத்தவனே முழுமடையன்*

*வாழ்க்கையிலே இருநொடிகள் மனிதநிலைக் குட்பட்டு*
*அழுதுவிட்டு அழுதநெஞ்சை ஆற்றிவிட்டு வாழ்ந்தாலே*
*முழுமைநிலை வாழ்க்கையினை முத்தமிடும் அதுபோதும்!*

*பெற்றுவந்த பிறப்புரிமை பெருஞ்சாவே; தனைத்தானே*
*விற்றமகள் அதற்குள்ளே விழுந்துவிடச் செல்லுமுனே*
*நால்வரையும் அருகழைத்து நாடகம்போல் முத்தமிட்டுச்*
*சேல்வரைந்த பூவிழியில் சிற்றிமைகள் துடிதுடிக்க*
*"நல்லவரே! உம்கண்ணீர் நானுறங்கச் செல்லுகின்ற*
*கல்லறையின் விளிம்பினிலும் கட்டாயம் விழவேண்டும்"*
*எனச்சொன்னாள்; நால்வரது இதயங்கள் வெடிப்பதனை*
*மனக்கண்ணால் கண்டபடி மௌனமாய்ச் சாய்ந்து விட்டாள்.*

*மரணத்தின் முட்கரமே! மாறாத தத்துவமே!*
*சரவைரம் போல்மின்னிச் சாய்ந்துவிட்ட மெழுகுவத்தி*
*போய்ச்சேரப் போகிறது; புகைகிளம்பப் போகிறது!*
*வாய்ச்சாறு தந்துதினம் வரவழைத்துக் கரமிணைத்து,*
*விளக்கணைத்துத் தன் ஆடை விலக்கிவைத்துக் கொண்டிருந்த*
*விளக்கணையப் போகிறது; விட்டுவிடு அணையட்டும்!*

●

# அனுபவம் வேண்டும்

*கன்னித் தமிழ்க்கவிக்குக் கற்கண்டு வார்த்தைகளை*
*எண்ணிக் கிடந்தேன் எதிர்வந்த - வண்ணமகள்*
*வண்டுவிழி பாட்டுக்கு வார்த்தை தருமதனைக்*
*கண்டுதெளி என்றாள் களித்து.*

*கன்னி மயிலழகைக் காதல் கவிதையிலே*
*பின்னி அவளழகைப் பேசினேன் - மின்னலெனக்*
*கன்னங்கள் மீது கனிமுத்தம் இட்டெனக்குத்*
*தென்னங்கள் தான்தந்தாள் தேன்.*

*கிட்டப் படுத்துக் கிளுகிளுக்கும் என் நெஞ்சைத்*
*தட்டிக் கொடுத்துத் தணலவித்துத் - தொட்டாள்*
*கடலோரம் வீசுகின்ற காற்றெல்லாம் என்றன்*
*உடலேறி விட்டதென ஊர்ந்து*

*அப்-பாவை என்னை அணைத்த சுகத்தீயில்*
*இப்பாவி நெஞ்சம் எரிந்ததே! - அப்பப்பா!*
*தள்ளாடி நான்வீழ்ந்தேன் தங்கமகள் காட்டி நின்ற*
*கள்ளாடும் பேரழகைக் கண்டு*

முத்தம் இதழ்விதைக்க மோக வெறிபிறக்கப்
பித்தம் தலைக்கேறப் பேச்சின்றி - மத்தளம்போல்
தட்டினேன் அந்தத் தளிர்க்கொடியை; பால்குடித்த
குட்டிபோல் ஆடினேன் கூத்து.

கூந்தலிலே மெத்தையிட்டுக் கோல முகநிலவை
நீந்தவிட்டுப் பார்த்து நினைவிழந்து - பூந்தடத்தில்
ஆடினேன் ஆமாம் அதைச்செய்ய வில்லையெனில்
பேடிநான் என்பாளே பெண்.

அன்னவளும் என்னை அணுஅணுவாய்த் தின்றாள்; - நான்
சொன்னதெலாம் செய்து சுகம்வளர்த்தாள் - கண்சுழற்றி
ஆடினாள் ஆடி அவளுடலால் என்னுடலை
மூடினாள் பூப்போல் முகிழ்த்து

சிற்றின்பம் என்றவர்க்குச் சிந்தையிலே கோளாறா?
பெற்றதென்ன பேரின்பம் பெண்ணைவிட? - பற்றிப்
புது மயக்கம் தந்தவளின் பூந்தொடையில் போதை
மதுமணக்கக் கண்டேன் மலைத்து

பாட்டெழுதி ஏங்கிவரும் பாவி எனக்கந்தத்
தோட்டமலர் வந்தே சுகக்கதவின் - பூட்டைத்
திறந்தாளே நெஞ்சுக்குள் தேனோட, அந்த
வரந்தானே நான்பெற்ற வாழ்வு?

தேன்வழிந்த பின்னாலே தீர்ந்துவிட்ட சக்கையென
நான்களைத்துப் போனேன் நலிந்து - தேன்பூக்
கமலக்கால் அன்னம் களமழைத்தே அந்தச்
சமருக்குள் செய்தாள் சதி

*கன்னிக் கனியென்று கைக்கு வருமென்றே*
*எண்ணிக் கிடந்தவனின் ஏக்கத்தைக் - கொன்ற*
*கனிக்கவிதை போன்றமகள் காமந் தணித்தே*
*இனிக்கவிதை தீட்டென்றாள் ஈர்த்து*

*என்றன் அனுபவத்தை ஏட்டில் எழுத அதைக்*
*கன்னலும் வந்தே கடன்கேட்கும் - என்றும்*
*அனுபவத்தில் பூத்த அழகுக் கவியே*
*கணுவில்லாக் கன்னலெனக் காண்.*

●

# ஆசிரியர்

சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரத்துக் கதவுகளாய்ச்
  சார்ந்திருப்ப தாசிரியர் கூட்டம் - அது
அமுதான கவிகாட்டும் அந்திவண்ணப் பூந்தோட்டம்
  அறிவுமணம் நின்றகலைக் கோட்டம்

ஏணியென மாணவரை ஏற்றிவிட்டுத் தாம்கீழே
  இருப்பாரே இதுவன்றோ புதுமை - அந்த
மேனிநலம் பாராத மேதையரைப் பாடாமல்
  மேதினியில் இருக்கிறதா கவிதை?

அன்னவரின் நெஞ்சினிலே ஆனந்தம் நின்றால்தான்
  அறிவுநதி தேனாக ஓடும் - துன்பக்
கண்ணீரின் கரையோரம் கதைகேட்டு நின்றாலா
  கவிதைமயில் அங்கெழுந்து ஆடும்?

வறுமைக்குத் துணைபோன வாழ்வுக்குச் சுமையாகி
   வாடுவதா ஆசிரியர் வேலை? - இங்கே
சிறுமைக்குக் கவியாகித் தீயாலே கருகுவதா
   சித்திரப்பூ மணிமுத்துச் சோலை?

தெய்வமணி மாளிகையில் தீபமெனத் தாமிருந்து
   தெளிவான ஒளியறிவு தருவார் - ஆமாம்!
நெய்யிழந்த பின்னாலும் நின்றெரிந்து மெய்கருகி
   நெஞ்சொடிவார் யார்எண்ணெய் தருவார்?

பெற்றமனம் போல்நமது பேதைமையைச் சுட்டுவிடப்
   பெரியகல்வி கற்றார்கள் மெல்ல - எல்லாம்
கற்றவர்கள் வறுமைகெடக் கற்கவில்லை ஆமெந்தக்
   கடவுளிடம் நானிதனைச் சொல்ல?

தத்துவமே ஆசிரியர் தந்ததுதான் ஆமிஃது
   சமுதாயம் போடுகின்ற கணக்கு - ஆனால்
புத்தகத்தைச் சுமக்கின்ற போக்கற்றோர் எனமீண்டும்
   புகல்கிறதே புரியவில்லை எனக்கு.

தம்குருதி எண்ணெயிட்டுத் தம்நரம்பைத் திரியாக்கித்
   தருகின்றார் அறிவாளியை நாளும் - இங்கே
இம்மையிலே வழிகாட்டி இருளோட்டும் அவரிலையேல்
   எந்தவிதம் மனிதகுலம் வாழும்?

பட்டையிடப் பட்டையிடப் பனியொளியைச் சிந்துமெனப்
   பலர்வைரம் தனைப்பற்றிச் சொன்னார் - வறுமை
சுட்டெரிக்கச் சுட்டெரிக்கத் தூயஒளி தருமிவர்க்குச்
   சுவையாக யாருவமை சொன்னார்?

*கரைசேர்த்த பின்னாலே கவலையலை மோதிதினம்*
*கண்கலங்கி நிற்கிறதே தோணி - அறிவுக்*
*குறைபோக்கும் ஆசிரியர் குறைதீர்க்கச் சமுதாயம்*
*கொடுக்கிறதா சரியான தீனி?*

*ஆசிரியர் பணியொன்றே அறப்பணி என்றேதம்மை*
*அர்ப்பணித்துக் கொண்டவரைத் தொழுது - தென்றல்*
*வீசிவரும் வேளைகளில் வித்தாரக் கவிதையெனும்*
*விதையிடுவோம் அறிவுநிலம் உழுது.*

*அடுத்தவொரு புவிபடைத்தால் ஆண்டவனே! ஆளுகின்றோர்*
*ஆசிரிய ராயிருக்க வேண்டும் - அறிவு*
*கொடுத்தவரை மதிக்காத கோணல்மதிச் சமுதாயக்*
*கொள்கைக்கே உயிர்வரவோ மீண்டும்?*

●

(பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் கழகம் நடத்திய அனைத்துக் கல்லூரிக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை 4.9.72)

# இதயத்தில் நாம்

## தமிழ் வாழ்த்து

பொன்பட்டு நெஞ்சுக்குள் பூம்பாட்டுத் தந்தவளே!
பூவாகி வந்த தமிழே!
பொதிகையிலே குழல்முடித்து மதுரையிலே பூமுடித்துப்
பொன்னளந்த கன்னி மகளே!
கண்கொட்டும் நேரமெலாம் கவிகொட்ட வைத்தவளே!
கனித்தட்டுப் போன்ற நிலவே!
கலையாத கலையாகி, நிலையான நினைவாகிக்
கவியாகி வந்த பொருளே!
வெண்பட்டுக் குழந்தைக்கு விழிதொட்டுத் திறக்கையிலே
விழியெங்கும் நின்ற கலையே!
வித்தாரக் கவிநெஞ்சில் முத்தாரம் கொண்டவளே!
வித்தாகி வந்த கனியே!
பண்கட்டும் பாட்டுமகன் பதந்தொட்டு வணங்குகிறேன்
பாலாகி ஊறு தமிழே!
பனிகொஞ்சும் மலரள்ளிக் கனிகொஞ்சும் சுவையள்ளிப்
பாட்டாகி ஆடு தமிழே!

(வேறு)

மீனொலிக்கும் வைகைநதி மேடை போட
மிதந்தாடும் பூந்தென்றல் நடனம் ஆட,
தேனொலித்த முத்தமிழை, செல்வத் தேனைத்
தினமொலித்துத் தேனளிக்கும் பணியில் வாழும்
வானொலியின் வணிகவியல் பிரிவு, நான்கு
வயதுக்குள் அடியெடுத்து வைக்கும் நேரம்
நானொலிக்கும் கவிதையிது சுவைக்கும் என்றால்
நடுவானில் போட்டவிதை முளைக்கும் என்பேன்.

மறக்காத நிகழ்ச்சியெலாம் கேட்டுக் கேட்டு
மரக்காது கொண்டவரும் இனிக்கு தென்றார்
சுரக்காதா தேன்கிண்ணம்? நெஞ்சுக் குள்ளே
சுவைக்காதா என்றுபலர் காத்தி ருப்பார்
இருகாது கொண்டவர்நம் நிகழ்ச்சி கேட்டால்
இனிக்காது தேனென்பார்; மேலும் கேட்க
இருகாதா? போதாதா? மேனி எங்கும்
இருக்காதா செவிகளென ஏங்கிப் போவார்.

வண்ணங்கள் வானவில்லில் நடனம் ஆடும்
வசந்தங்கள் பூவுக்கு மேடை போடும்
தென்னங்கள் நெஞ்சுக்குள் கவிதை பாடும்
தேன்பூசி வைத்திருக்கும் மங்கை மாரின்
கன்னங்கள் முத்தமிடும் வெள்ளி மாடம்
காத்திருந்து வானொலியில் கேட்கும் தேனின்
கிண்ணங்கள் அப்பப்பா! அவையே நெஞ்சக்
கிளர்ச்சிக்கும் உணர்ச்சிதரும் கவிதைக்கூடம்

*போர்வைக்குள் மறைத்தாலும் தாழை சிந்தும்*
*பூமணந்தான் மறைந்திடுமா? இதனைக் கேட்பீர்*
*தேர்வுக்குப் படியென்று சொல்வார் அப்பா,*
*தினம்நண்பர் தேன்கிண்ணம் கேட்பார் தப்பா?*
*பார்வைக்குப் படிப்பதுபோல் நடிப்பா ரப்பா*
*பாரப்பா பக்கங்கள் புரளு மப்பா*
*ஆர்வத்துக் கணையிடுவார் அப்பா ஆனால்*
*அன்றாடம் இதைக்கேட்பார் தவறா(?) தப்பா(?)*

*மையளந்த பூங்கண்ணி அத்தான் முன்னால்*
*மலரளந்த குழலோடும் இலையில் சோற்றில்*
*நெய்யளந்து போட்டுவிட்(டு) இறுதி யாக*
*நெஞ்சினிக்கும் தேன்கூழைத் தந்தபோது*
*பொய்யளந்து பேசவில்லை அடிவ சந்தி!*
*புதிதாக இனிக்கிறதே! எவ்வா றென்பான்*
*கையளந்த இடையழகி சமையற் கட்டில்*
*'கனிமணக்கும் திரையமுதம் கேட்டேன்' என்பாள்.*

*முந்தானை சதிசெய்து சரிந்தால் மங்கை*
*முறையோடு சரிசெய்வாள் அதனைப் போல*
*செந்தாழை மடல்கொண்டு நேயர் நாமும்*
*சிந்தனையில் பிறந்துவந்த கருத்தை எல்லாம்*
*தந்தாலும் தந்தோமே அடடா! ஓலைச்*
*சரங்கண்டு வியந்தாராம் நிலையத் தார்கள்*
*முந்தாநாள் கடிதமொடு சேர்த்துப் பார்க்க*
*மூன்றாண்டு போதாதாம் கணக்குப் பார்க்க.*

அரும்பாக்கி, நிகழ்ச்சிகளை மலராய் ஆக்கி
அருந்தேனாய்ப் புதுமைகளைத் தேக்கித் தேக்கி
விருந்தாக்கி நேயர்தம் பசியைப் போக்கி
விலையின்றி எல்லோரும் கடித்துத் தின்னும்
கரும்பாக்கி, நல்வண்ணச் சுடருக் குள்ளே
கனிதேக்கி வைத்தவர்கள் நம்மை எல்லாம்
எறும்பாக்கி வைத்துள்ளார் மொய்த்துத் தின்போம்
இனிப்பாக்கி வைத்துள்ளார் எடுத்தே உண்போம்.

கனித்தேனே போல் சுவைக்கும் நிகழ்ச்சி கேட்டுக்
களிப்பேனே! வியப்பேனே! அமுதென் பேனே!
இனித்தேனே தேவையில்லை என்றே மாலை
இசைத்தேனைக் கேட்பேனே! ஏழே முக்கால்
மணிதானே? தேன்கிண்ணம் கேட்டுத் துன்பம்
மறப்பேனே! எழில்வண்ணச் சுடரைக் கேட்டுத்
தனித்தேனே என்பேனே என்றே பல்லோர்
தங்கவிவித் பாரதியைப் பற்றிச் சொன்னார்.

(வேறு)

நம்விவித பாரதியின் நற்பணியை நாடெல்லாம்
அம்பொன்னின் அழகென்னும் அதிசயத்தைச் சொல்வேனா?

தங்கமணிப் பூவேய்ந்த சந்தனத்து மேடையிலே
பொங்கிவந்து கவிச்சிந்து புதுமையுறத் தந்துவரும்

பூந்தென்றல் என்பேனா? புதுமைகளைச் சொல்வேனா?
தீந்தேனின் சுவையெல்லாம் சேர்ந்துவந்த தென்பேனா?

நேயர்களின் நெஞ்சத்து நினைவுகளில் தோய்ந்தெழுந்து
பாயவரும் காவிரியே படம்போட்ட தென்பேனா?

சிறப்புத் தேன்கிண்ணம் செம்பொன்னைப் போல்மின்னும்
உரக்கச் சொல்லுகிறேன் உண்மையிது நம்மெண்ணம்.

*சேலையசை கின்றவொரு சித்திரப்பூ மங்கையென*
*மாலையிசை தருகின்ற மனமயக்கம் சொல்வேனா?*

*பொன்வண்டு கண்டாடும் பூச்செண்டின் பேரழகை*
*கண்கொண்டு பார்ப்பேனா? கவிகொண்டு பார்ப்பேனா?*

*வண்ணச் சுடருக்குள் வந்தாடும் நாடகங்கள்*
*எண்ணத்தில் பண்பாடி இனிப்பதனைச் சொல்வேனா?*

*அஞ்சல் பெட்டியிலே ஆயிரமாய்க் கடிதங்கள்*
*கொஞ்சிக் களிக்கின்ற கோலமொழி சொல்வேனா?*

*தேன்கலந்த கிண்ணமது தினம்வழங்கும் கவிதைத்தேன்*
*ஊன்கலந்து ஒன்றிவிட்ட உண்மையினைச் சொல்வேனா?*

*உங்கள் விருப்பத்தை ஒலிபரப்பும் பணியினைநான்*
*தங்கக் கலசத்தின் தனிவைரம் என்பேனா?*

*ரசிகர்தேன் கிண்ணத்தில் நடனமிடும் பூஞ்சுவையைப்*
*பசித்தாலும் கேட்கின்றார் பலபேர்கள் என்பேனா?*

*மூன்றாண்டு காலத்தில் முத்தமிழர் நெஞ்சுக்குள்*
*தோன்றாத சுகமெல்லாம் தோன்றவைத்த தென்பேனா?*

*பழந்தேனா? புதுத்தேனா? பக்குவமாய்ப் பால்கொஞ்சம்*
*கலந்தேனா எனக்கேட்டுக் கச்சிதமாய் நிகழ்ச்சியெலாம்*

*உருவாக்கித் தருகின்ற உத்தமரை நினைப்பேனா?*
*கரும்பான சுவைசேர்க்கும் கவிதைகளை நினைப்பேனா?*

*எதற்குமே வாடாத இளம்பூக்கள் என்பேனா?*
*இதற்குமேல் எதைப்பாடும் எழுதாத என் - பேனா?*

*முதிரான இளமனது, முற்றாத பூவயது*
*சதிராடும் துடிதுடிப்பு, தங்கம்போல் பளபளப்பு!*

*பார்போற்றும் நம்விவித பாரதியை நம்நெஞ்சத்*
*தேரேற்றி நெஞ்சுக்குள் சித்திரம்போல் இட்டுவைப்போம்.*

*மூன்றாண்டுக் குழந்தைக்கு -*

*முத்தாரம் சூட்டி முன்னழகு பார்த்துவிட்டுப்*
*பித்தான நெஞ்சோடு பின்னழகு பார்ப்பதுபோல்*

*நம்விவித பாரதியை நாளெல்லாம் சீராட்டிச்*
*செம்பவளக் கிண்ணத்தில் தேன்வாங்கிக் குடித்திருப்போம்!*

*தமிழ்க்குலமே! தமிழ்க்குலமே! தங்கமகன் வேண்டுகிறேன்*
*நமக்காக நாளெல்லாம் இமைக்காமல் பணியாற்றும்*

*நிலையத்தார் மனம்போல நினைவோடு உறவாடிக்*
*கலைத்தேரில் வலம்வருவோம் காலமகள் வீதியிலே!*

*செவியெல்லாம் நாவாகச் செந்தமிழில் சிந்திவிழும்*
*கவியெல்லாம் தேனாகக் காலமெலாம் வாழ்ந்திருப்போம்.*

*பொன்நெஞ்சம் நம்நெஞ்சம் பூமஞ்சம் எனச்சொல்லிக்*
*கண்துஞ்சும் வேளையிலும் கவிகொஞ்சி மகிழ்ந்திருப்போம்*

*நெற்பதர்நான் எனைக்கவிதை நெய்துவரச் சொன்னார்கள்*
*கற்பனையாம் நூலெடுத்துக் கனிவாய்இக் கவிதைத்தேன்*

*பூமணக்க விதைதூவும் புதுஉழவன் போல்நானும்*
*பூமனக் கவிதைதூவிப் பூந்தமிழால் பாடிவிட்டேன்.*

*கைக்கு வளையிருந்தால் கன்னியர்க்கு அழகு ஆனால்*
*கைக் குவளை இல்லாத கவிஞன்நான் கைகுவித்தேன்.*

●

(கவியரசு கண்ணதாசன் தலைமையில் விவித் பாரதியின் மூன்றாண்டு நிறைவு விழாக் கவியரங்கில் 15.4.72 அன்று வானொலியில் ஒலிபரப்பான கவிதை)

# சரித்திரம் சமைத்தோம்

பூக்கழனி போலிருந்த வங்க மண்ணைப்
  புதைகாடாய் ஆக்கிவைத்த கொடியோன் செய்கை
மாக்கொடுமை எனச்சொன்னோம் மறுத்தான் அந்த
  மந்தமதி கொண்டமகன் சுடுமா என்றே
தீக்குழியில் கைவைத்துப் பார்த்தான் ஆமாம்
  திருநாட்டிற் கெதிராய்ப்போர் தொடுத்தான் இன்றோ
சாக்குழியைத் தனக்கவனே தோண்டிக் கொண்டு
  தவிக்கின்றான் மண்தள்ள ஆளே இல்லை.

நாய், கடிக்க எலும்பில்லை என்றே சொந்த
  நாக்கையே கடித்துண்ண முயல லாமா?
பேய்பிடித்த வஞ்ச மகன், நாமே இட்ட
  பிச்சையிலே வளர்ந்த மகன் உறவுக் கென்றே
பாய்விரிக்கும் நம்மெண்ணம் அறியா னாகிப்
  பலர்சிரிக்க நம்மீது படையெ டுத்தான்
தாய்கொடுத்த நெஞ்செனினும் பகையைக் கண்டால்
  தணல்கொடுத்த எரிமலைநாம் எனமெய்ப் பித்தோம்.

வம்பிழுக்க வந்தவரின் வாய றுத்து,
வஞ்சமனம் கொண்டவரின் உடல் கிழித்து,
நம்பலத்தைக் காட்டிடுவோம் எனக்கொ தித்து
நச்செண்ணம் கொண்டவரின் நரம்பெ டுத்துப்
பம்பரத்தைச் சுற்றுதற்குக் கயிறு கேட்ட
பாரதத்துத் தம்பிகட்குத் தந்தோம்; நம்மை
அம்பெடுத்துத் தாக்கவந்த நாய்க்கூட் டத்தை
அடுப்பெரிக்கும் விறகுகளாய் ஆக்கி வைத்தோம்.

கள்ளமனம் நமைவெற்றி கொள்வ தில்லை
கடல்நீரை மழைபெய்து நனைத்த தில்லை
வெள்ளை மனம் தோல்விமுகம் கண்ட தில்லை
வெங்கதிரை மின்மினிகள் மறைத்த தில்லை
கொள்ளைமனம் கொண்டமகன் வரலாற் றேட்டின்
கொலைகாரர் பட்டியலில் சேர்க்கப் பட்டான்
வெள்ளெருக்கம் பூவுக்கு முல்லைக் காட்டில்
வேலையென்ன? வேரோடு சாய்த்தோம்; மாய்த்தோம்.

முப்பழங்கள் ஆடுகின்ற தோட்டந் தன்னில்
மூக்குடைந்த கழுகுவரின் வரவேற் போமா?
தப்பிதங்கள் செய்தவரின் உடல டுக்கித்
தங்கவங்க மண்ணுக்கோர் அரணைக் கட்டிக்
கொப்புளங்கள் போன்றவரை ஊதித் தள்ளிக்
குருதியிலே வீரமெனும் பயிர்வ ளர்த்தோம்.
அப்பளங்கள் போன்றவரை நொறுக்கி அள்ளி
அறத்தாயின் பாதத்தில் தூவி வைத்தோம்.

*துப்பாக்கி பிடிக்காத நாட்டோர் என்றே*
*துணிவாக்கி அவன்வந்தான் நெஞ்சைத் தூக்கி*
*தப்பாக்கி அவன்கருத்தைத் தவறாய் ஆக்கி*
*சரமாக்கிப் பகைவரைநம் செருப்பாய் ஆக்கி*
*எப்பாக்கி இனிவைப்போம் என்றே நெஞ்சை*
*இரும்பாக்கி நம்பலத்தை இமயத் திற்கே*
*ஒப்பாக்கி நம்பகையைத் துரும்பாய் ஆக்கி*
*ஒருபாக்கி இல்லாமல் பகைமு டித்தோம்.*

*திக்கெட்டும் முழங்கட்டும் வெற்றிச் சங்கு*
*திணறட்டும் பகைக்கூட்டம் மயங்கி அங்கு*
*திக்கட்டும்; கதறட்டும் பகைவர் கூட்டம்!*
*திமிர்பட்டம் பெற்றவர்க்கு முடிந்த தாட்டம்.*
*மக்கட்டும் பகைவருடல் மண்ணில்; வெந்து*
*மறையட்டும்; மணக்கட்டும் பிணத்தின் வாடை*
*கைக்கெட்டும் பகைவர்க்குச் சேலை கட்டிக்*
*கண்மூடி நாம்சிரித்தோம் கைகள் கொட்டி.*

*கண்ணீரால் கறைபடிந்த வங்க மண்ணைக்*
*கயவர்தம் ரத்தத்தால் கழுவி வைத்தோம்.*
*தண்ணீரில் மீன்வாழும் அறிவோம் ஆனால்*
*தணலுக்குள் மீன்வாழ்ந்த தில்லை; ரத்தச்*
*செந்நாயை நம்புகின்ற கயவன் நாளை*
*சிரமறுத்து புதைபடுவான்; அமெரிக் காவைக்*
*கண்போல நம்புபவன் கதையும் ஓயும்*
*கடலுக்குள் மணல்வீடா நிலைத்து நிற்கும்?*

●

(1.7.92 ‘கவிதை’ இதழில் வெளிவந்த கவிதை வானொலியில் கவிக்குரல் பகுதியில் ஒலிபரப்பப் பெற்றது)

# காவிரியும் தமிழகமும்

*கண்ணுக்கு மைதீட்டும் விரல்கள் போலும்*
*கச்சிதமாய் எமைக்காத்துத் தமிழர் வாழும்*
*மண்ணுக்கு வளமீந்த தாயே! உன்னை*
*மற்றெவரோ தமக்குரிமை என்றார். மேலும்*
*விண்ணுக்கா வெங்கதிரோன் சொந்தம் என்று*
*விளக்கேற்றிப் பார்க்கின்றார் சிலபேர் இன்று*
*பண்ணுக்குத் தலைமகளே! தமிழர் தாயே!*
*பாராண்ட காவிரியே பாட்டில் நீவா!*

*கா-விரித்தாய் போலெவர்தான் தந்தார் நன்மை?*
*காவிரித்(து) ஆய்போலக் காப்பாய் எம்மை.*
*பூவிரிக்கப் பஞ்சணையில் தூவும் முல்லைப்*
*பூப்போல விளைவிப்பாய் செந்நெல் தன்னை*
*பூவிரிக்கும் வெண்ணிலவின் ஒளியும், விண்மேல்*
*பொன்கதிரோன் தந்தகடன் தானே? மண்மேல்*
*நீவிரிக்கும் செல்வந்தான் தாயே! எம்மை*
*நெஞ்சுயர்த்தி நடைபோட வைத்த தென்போம்.*

*தளிர்க்கொடியே! நீயிருக்கப் பஞ்சம் உண்டா?*
*சந்திக்கு வினைத்தொகையில் இடந்தான் உண்டா?*
*பளிங்கனைய தமிழகத்து வரலாற் றேட்டைப்*
*பாதிவரை தீட்டினைநீ! தமிழர் வீட்டில்*
*தளிர்நடையைப் போட்டுவந்த மழலை தான்நீ!*
*தான்பொய்த்துப் போகாத தமிழ்த்தெய் வம்நீ!*
*குளிர்நிலவு காற்றடித்தே அணைந்தா போகும்?*
*குலமகளே! உன்னோட்டம் குறைந்தா போகும்?*

*முத்தாடப் புகழ்கொண்டார் மதுரை வேந்தர்*
*மூத்தபுகழ் தான் கொண்டார் களிற்றால் சேரர்*
*முத்தாரம் முகிழ்த்ததுபோல் பூக்கள் தம்மை*
*முளைத்தாடச் செய்கின்ற உன்னைச் சோழர்*
*சொத்தாகக் கொண்டதனால் தானே தாயே!*
*சுகமான புகழ்கொண்டார்? பழைய மங்கை*
*அத்தானை இழந்தபின்னும் பூவா வைப்பாள்?*
*அறமகளே! உனையிழந்தால் உயிரா வைப்போம்?*

*கட்டழகுத் தமிழ்ச்சேயை அணைத்தெ டுத்துன்*
*கன்னலெனும் பாலூட்டிக் கழனிப் பச்சைப்*
*பட்டழகு போர்த்தியெழில் பார்ப்பாய் தாயே!*
*பாசத்தால் வளர்ந்தமகன் உன்றன்பாதம்*
*தொட்டழகு பார்ப்பான்உன் மடியில் தானே*
*தூயமகன் துயின்றிடுவான்; உப்பு மூட்டை*
*இட்டலையைத் தடுக்கத்தான் நினைத்தார் போலும்?*
*இனியவளே! உனைத்தடுக்க எவரால் ஏலும்?*

*தமிழகத்தைச் சேயென்றால் தாயே தான் நீ!*
*தமிழகத்தைத் தாயென்றால் சேயே தான்நீ!*
*தமிழகத்தைப் பயிரென்றால் நிலமே தான்நீ!*
*தமிழகத்துக் குருதியிலே ஊறிப்போன*
*அமிழ்தமுனைச் சொந்தமெனச் சிலபேர் சொன்னார்*
*அறியாமல் பேசுகின்றார் தாயே! ஏனோ*
*உமியோடு சமைத்துண்ணப் பார்க்கின் றார்கள்*
*உன்வீடு தமிழகந்தான் உலகே சொல்லும்.*

●

(1971 – 72 சென்னை 'மாணவர் மன்றம்' நடத்திய மாநில அனைத்துக் கல்லூரிக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

# இலக்கணக் காதல்

நெஞ்சத்தின் நினைவலைகள் கவிதை ஆற்றில்
    நீச்சலிடும் நேரமது; உலகம் தண்ணீர்ப்
பஞ்சத்தில் தவிக்கின்ற போதில் நானும்
    பசுப்பாலைப் பார்ப்பதுபோல், பூக்கள் தொங்கும்
மஞ்சத்தில் பூக்குன்றாய் மலர்ந்து சாய்ந்த
    மாதவளின் முதுகழகைப் பார்த்தேன்; தொட்டுக்
கொஞ்சத்தான் இடையிலொரு கையும் கொஞ்சிக்
    குலவத்தான் தோளிலொரு கையும் போட்டேன்.

'பிஞ்சத்தான் என்தோள்கள்' என்றாள்; 'இன்பம்
    பேசத்தான் அணைத்திட்டேன் கண்ணே' என்றேன்.
'நஞ்சத்தான் உம்மெதிரே தேனும்' என்றாள்
    'நரகந்தான் நீயில்லா மஞ்சம்' என்றேன்.
'பஞ்சந்தான் நம்மிடையே காற்று'க் கென்றாள்
    'பக்கந்தான் தூரமில்லை சொர்க்கம்' என்றேன்.
'அஞ்சத்தான் அஞ்சுகிறேன் இரவுக்' கென்றாள்
    'அதையுந்தான் இப்போது பார்ப்போம்' என்றேன்.

*நாணந்தான் அவள்முகத்தில் மேடை கட்டி*
*நாட்டியங்கள் ஆடுகின்ற தோற்றங் கண்டேன்.*
*'ஏனத்தான் கவிதைமொழி இங்கே?' என்றாள்*
*'என்னடி! என் கவிதைக்கும் எதிர்ப்பா?' என்றேன்.*
*'தேனத்தான்,கனியத்தான் தேனைச் சேர்த்த*
*தினையத்தான் உம்கவிதை' என்றாள்; என்னை*
*'ஆணழகே! என்றாள்நான் 'கரும்பே' என்றேன்.*
*அடி!(க்) கரும்பு தான்மிகவும் இனிக்கும் என்றேன்.*

*பழுத்தசையும் கனிக்குன்று நடனம் ஆடிப்*
*பச்சைநிறத் தாடைகட்டி வருதல் போல*
*'எழுந்' 'தசைந்து' 'சீர்' பாடி என்னிடத்தில்*
*இன்னமுதே! 'அடி' யெடுத்து வந்தாய் நானும்*
*செழுந்தேனே! உனைத்தொட்டுச் சுவைக்கு முன்னே*
*சீராகத் 'தொடை' காட்டித் 'தளை'த்தாய் என்னை.*
*விழுந்தேனே கவிக்கடலில்; நீயில் லாமல்*
*வினைத்தொகையில் 'சந்தி'யென வாழேன் என்றேன்.*

*'பண்பென்னும் தொகைவிகுதி' தன்னைக் கண்ணில்*
*பக்குவமாய்த் தீட்டியெனை இழுத்தாய்; பின்னால்*
*'வெண்பாவில் கனிச்சீர்' போல் விலகிச் சென்றாய்*
*விடுவேனா? 'குற்றியலின் உகர'த்தோடு*
*தன்போக்கில் சேருகின்ற 'உயிர்போல்' நானும்*
*தங்கமயில் உனைச்சேர வந்தேன்; என்றன்*
*கண்பாவை போன்றவளே! கனகப் பூவே!*
*'கலிப்பா'வின் ஓசையையுன் நடையில் கண்டேன்.*

முடிந்தாலும் பொருள்தொடரும் 'முற்றெச் சம்'போல்
 மோகனமே! நீதந்த இன்பம் நெஞ்சில்
விடிந்தாலும் இனிக்கிறதே! தேனே! உன்றன்
 விழிப்பூவின் இமைஇதழை விலக்கி ஆங்கே
படிந்தாடும் என்னுருவைப் பார்த்தேன் உன்றன்
 பனிமுகத்தை ஒளிக்கரத்தால் தொட்டேன்; என்றும்
முடியாத 'வெண்பா' நீ என்றன் மூச்சை
 'முச்சீரா'ய்க் கொண்டே நீ முடிவாய் என்பேன்.

பாகுநிகர் மொழியாளே! இலக்க ணத்தில்
 படித்துள்ளேன் 'உருபுக்கு மயக்கம்' உண்டு
மோகமலர் போன்றவளே! கண்டேன் உன்றன்
 முதிராத உறுப்புக்கும் மயக்கம் உண்டு
மேகமழைக் குழலாளே! நெஞ்சக் காவில்
 மிதந்தாடும் மலர்க்காற்றே! பவளப் பூவே
'ஆகுபெயர்' போலெனக்கே ஆகி விட்டாய்
 அடிபிறழா 'வஞ்சிப்பா' நீதான் கண்ணே!

சரஞ்சரமாய் நான்கவிதை பாடப் பாடச்
 சந்தங்கள் தத்துவங்கள் சேர்த்துத் தந்தாய்
வரந்தருவாய்; ஓசையினை நிறைப்ப தற்கு
 வருகின்ற அளபெடைபோல் எனக்கே உன்றன்
கரந்தருவாய்; கண்ணாடிப் பெண்ணே! பூத்த
 கனிநிலவே! நாமிரட்டைக் கிளவி யென்பேன்
இரட்டையெனும் கிளவிதனைப் பிரித்தால் இங்கே
 இசைவான பொருளுண்டா? இன்னும் வா! வா!

முற்றெதுகை போலினிக்கும் மோகப் பாட்டே!
முத்தாரச் சிரிப்பழகே! இலக்க ணத்தைக்
கற்றவர்கள் சொன்னார்கள், 'தம்பீ' நல்ல
'காரிகை' யைப் புரட்டிப்பார் என்று. நானும்
சிற்றறிவால்•சிந்தித்தேன் இனிக்கும் என்றன்
செழுந்தேனே! உனைப்புரட்டிப் பார்த்தேன்; பின்னால்
பொற்றொடியே! பூங்கிளியே! இலக்க ணத்தில்
புரியாத பகுதியெலாம் புரிந்து கொண்டேன்.

'பொய்ப்பேச்சுப் புலவரெனச் சொன்னார் அத்தான்
பொருத்தந்தான் உமக்கந்தப் பட்டம்' என்றாள்.
மெய்ச்சேலை தனக்களைந்து வீணை தன்னை
மீட்டிவிட்ட படியேநான் கண்ணை மூடி
'நெய்ச்சோறே! உனைப்பிசைய வேண்டும்' என்றேன்.
நித்திலமே! முக்கனியில் பிழிந்த உள்ளங்
"கைச்சாறே! உனையுறிஞ்சிக் குடிக்க வேண்டும்
கனிமேனி தனில்மிதக்க வேண்டும்" என்றேன்.

•

வடமானாள் நானிழுக்க இழுக்க, என்றன்
வசமானாள்; பசையானாள்; பால டைக்குங்
குடமானாள்; படகானாள்; கோடைக் கானல்
குளிரானாள்; பந்தாட்டம் பயிலு கின்ற
இடமானாள்; இனிதானாள்; பிரித்துப் பார்க்கும்
ஏடானாள்; இசையானாள்; சூட்டைத் தீர்க்கும்
உடலானாள்; ஈரத்தால் உடலில் ஒட்டும்
உடையானாள்; இனியென்ன உடும்பாய் ஆனேன்.

•

# நான்கடி இமயம்

சரித்திர மடியில் தங்கிக் கிடந்த
கருப்பிருள் போக்கிய காஞ்சி விடியலே!

அழுகையை உலர்த்திய அண்ணனே! உன்றன்
எழுதுகோல் துப்பிய எச்சிலே எங்கள்

தாகங் களுக்குத் தடாக மானது!
சோக நெருப்பைச் சுட்டுத் தீய்த்தது!

ஆயதோர் காலையில் ஆலய வீதியில்
நாயக னே!உன் நாத்திகம் கேட்கத்

தெய்வங் களெல்லாம் தேர்களில் வந்தன!
பொய்தான் தாமெனப் புலம்பிப் போயின!

அரிதாய்க் கிடைத்த அமுத சுரபியே!
பெரிய சாவுனைப் பிச்சை கொண்டதே!

கடற்கரை மணலில் கண்ணா மூச்சி
நடத்து கிறாயே! நாங்கள் உன்னை

எப்படித் தொடுவது? எப்படி? நீதான்
உப்பு மணலுள் ஒளிந்துகொண் டாயே!

*அணையா விளக்கின் அடிவெளிச் சத்தில்*
*இணையிலாக் காவியம் எழுதுகி றாயா?*

*முத்தமி ழில்நீ முழக்கிய மொழிகளை*
*முத்துக் கடலலை மொழிபெயர்க் கின்றதா?*

*தூயவன் மேனியைச் சுமந்தகல் லறையே!*
*நாயகன் பூமியே! நான்கடி இமயமே!*

*அன்னைத் தமிழின் 'அ' கரம் போனபின்*
*என்ன கவிதைநான் எழுதப் போகிறேன்?*

*ஏழு வண்ணம் இருந்தும் வானவில்*
*வாழு வதற்கு வானமே இல்லையே!*

*குறைந்து விடாமல் கோலம் இருக்க*
*வரைந்து வைத்த வாசலைக் காணோம்!*

*கல்லறை வாசலே கதவுகள் திறநீ!*
*பல்லவன் மேனியைப் பார்க்கப் போகிறேன்!*

*ஒருமுறை அன்னவன் உருவம் பார்த்தபின்*
*குருட னாகவும் கோடிச் சம்மதம்!*

*கண்டதும் அண்ணனின் காலடிப் பூவில்*
*என்னையே மாலையாய் இடப்போ கின்றேன்.*

●

(16.9.1975 தமிழரசு இதழில் வெளியான கவிதை)

# தேவமலர்

**வ**ரங்களெல்லாம் தவமிருந்த கார ணத்தால்
வந்துதித்த தேவமகன்; சிறைக்கோட் டத்தில்
நரம்பெடுத்து வலைபின்னிப் பின்னி, வெள்ளை
நதிகளுக்குள் சுதந்திரமீன் பிடித்த கைகள்!
இரவுகளைப் புலரவைத்து விடிந்த பின்னே
எரிந்துவிட்ட விடிவெள்ளி; எங்கள் நாட்டு
மரங்களுக்கே நிழல் கொடுத்த தெய்வப் பந்தல்.
மரணத்தின் நிழலுக்குள் மறைந்தா போகும்?

புன்னகைப்பூ மகுடியிலே, பாம்பு வாழும்
புற்றினையே ஆடவைத்தான்; இனிப்பைச் சிந்தும்
கண்ணசைப்பு வெடிகளினால் வறுமைத் தீயைக்
கருகவைத்துப் பூவுதிர்த்தான்; மனவா னத்தில்
அன்னை நிலா ஆனவன்தன் பிள்ளைக் கெல்லாம்
ஆண்மையினால் பால் கொடுத்தான்; காந்தி தந்த
இன்னமுதப் பூங்குழந்தை! நாங்கள் தூங்க
இழைபிரித்துக் கட்டியதே இதயத் தொட்டில்!

*அந்திமுகில் அவன்பாதம் தொட்டுக் கொஞ்ச*
*ஆகாயக் கிண்ணத்தில் வழிந்து சிந்தும்!*
*சந்திரப்பூ மலர்வதற்கு வரங்கள் கேட்டுத்*
*தங்கியவன் இமையடியில் தவங்கள் செய்யும்!*
*அந்தமகன் பேச்சொலிக்குக் கைகள் கொட்ட*
*அலைக்கைகள், கடலுடம்பை இழுத்துப் போகும்*
*செந்தளிர்ப்பூ நெய்தெடுத்த தேவ மேனி!*
*தேனாற்றைத் தேக்கியதே அணையாய் மாறி!*

*விழிநாக்கில் மௌனங்கள் வார்த்தை யாகும்*
*விடிவெள்ளி அவன்கண்ணில் திசையைக் காணும்*
*பொழிந்தமழை தானியமே பொழிந்த தென்று*
*பூக்களெல்லாம் பயிர்வளர்த்த புனித நேரம்*
*அழிந்ததம்மா கவிவானம்! அதனால் நாங்கள்*
*அதனின்றும் உதிர்ந்துவிட்ட விண்மீன் ஆனோம்!*
*விழிவிளக்கைக் கண்ணீரால் அணைத்தோம்; நாங்கள்*
*விரல்களையே இழந்துவிட்ட நகங்கள் ஆனோம்!*

*பங்குவைத்துக் கொண்டதம்மா மரணம்; இங்கு*
*பந்திவைத்த கைகளையே; தேவ தூதன்*
*அங்கமலர் பாடையிலே பூத்த தம்மா!*
*அல்லியுடன் எரித்தெடுத்த சாம்ப லாலே*
*கங்கைநதி தன்பாவம் கழுவிக் கொள்ளக்*
*கண்ணீரில் எம்மிமைகள் கரைந்து துள்ள*
*பொங்கிவந்த இமயநதி நெருப்பாய்ச் செல்ல*
*போகின்றோம் இனிமேலும் என்ன சொல்ல?*

●

( நேருவின் 85ஆம் பிறந்தநாள் விழாவின் போது தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்ககமும் தமிழ்நாடு அரசு செய்தித் துறை இயக்ககமும் இணைந்து நடத்திய அனைத்துக் கல்லூரிக் கவிதைப் போட்டியில் அரங்கேற்றப்பெற்று முதற் பரிசு பெற்ற கவிதை.
இடம்: சென்னை ராஜாஜி மண்டபம், நாள்: 14–11–1973)

# பூமியின் பிறந்தநாள்

*எங்கள் தமிழர் எடுக்கும் விழாவிது*
*பொங்கலா? இல்லை பூமியின் பிறந்தநாள்*

*மகன்களின் வியர்வையை மடிமேல் எழுதி*
*மகரந்த மானது மண்ணின் புழுதி!*

*வியர்வைத் துளிகள் விழுந்த பிறகுதான்*
*வயலில் நெல்மணி மக'சூல் கொண்டது!*

*இந்தமண் தரையில் ஏர்முனைக் கிறுக்கயே*
*முந்திப் பிறந்த முழுமுதற் கவிதை!*

*அதைஎழு தியவன் அவன்தான்; புவிக்கு*
*விதைநெல் லாகி விளைபவன் அவன்தான்!*

*பூச்சொரி கின்ற பூமிப் பந்தில்*
*மூச்சுக் காற்றையே முற்றும் அடைத்தவன்!*

*ஆர்வத் தறிகளை அயரா தியக்கிப்*
*பார்மக ளுக்குப் பச்சை ஆடைகள்*

*கொடையாய் நெய்து கொடுத்த வனுக்குக்*
*கடைசியில் மிச்சம் கைக்குட் டைகளா?*

*உலகைச் சுமக்கும் உழவனை இந்த*
*உலகம் சுமக்கும் ஒருநாள் இன்றுதான்!*

*மழையில் நனைந்தால் மணிக்குடை பிடிக்கலாம்!*
*அழுகையில் நனைந்தால் யார்குடை பிடிப்பது?*

*இரவிலும் பறக்கும் ஈரப் பறவைகள்*
*இறகுகள் உலர்த்தும் இனிய நாளிது!*

*இன்று மட்டுமே இன்ப விடுமுறை*
*என்று விதித்தது எங்கள் தலைமுறை!*

*மெல்லவே நிலத்தில் மின்னிச் சிரிக்கும்*
*நெல்முத் துக்கள் நிலத்தில் குளித்தவை!*

*புத்தமு தளக்கும் பொங்கற் பானையின்*
*முத்துப் பூநுரை, முனகல் ஒலிகளால்*
*அந்த உழவனின் ஆனந் தத்தைச்*
*சொந்த மொழிதனில் சொலவிழை கின்றது!*

*சமைத்துப் படைக்கும் சர்க்கரைப் பந்தியில்*
*அமுத சுரபியும் அமரக் கூடும்!*

*திரும்பும் திசையெலாம் தேன்தெறிக் கட்டும்*
*கரும்பும் மஞ்சளும் கைகுலுக் கட்டும்!*

*எங்கள் தமிழர் எடுக்கும் விழாவிது*
*பொங்கலா? இல்லை! பூமியின் பிறந்தநாள்!*

●

( 16.1.1975 தமிழரசு இதழில் வெளியான கவிதை)

# தங்கக்கதவுகளைத் தட்டு

*பூரதம்போல் வந்து புனைகின்ற பாடலுக்கு*
*ஆரத்தி ஆகிவிட்ட ஆலயமே! - நேரத்தில்*
*கற்றேன் விழிப்பாடல் கண்பூவே! உன்னால்தான்*
*பெற்றேன் இரண்டாம் பிறப்பு.*

*வான விளிம்பை வரையும் உன் ஆசைவிழி*
*காண நினைத்தேநான் காத்திருந்தேன் - தேனரும்ப*
*நீவந்து நின்றாய் நிழலாய்; கொடியோடு*
*பூவந்த தென்றேன் புரிந்து.*

*கனவுகளை உச்சரிக்கும் கண்ணிமையின் ஓரம்*
*எனது படம்வரைந்தாய் இன்று - மனக்குளத்தில்*
*'பூக்கல்' எறிந்து புறப்பட்டுப் போகின்றாய்*
*தூக்கக் கனவுகளைத் தொட்டு*

*பாதத்தைத் தேடிப் பனிநடந்து போவதுபோல்*
*சீதப்பூ நீ நடந்து செல்கின்றாய் - சீத*
*மொழியில் நடந்துவரும் மோகனமே! நீயென்*
*விழியில் விழுந்த விழி!*

*கண்ணில் நடந்து கவிதை நிலங்களிலே*
*என்னை விளையவைத்த என்நதியே! - உன் நடனக்*
*காதை அரங்கேற்றம் கண்டாட உன்னோடு*
*பாதை நடந்துவரும் பார்!*

*பூங்கரும்புச் சாறுன்னைப் பொற்கிண்ணம் தாங்கிநின்றால்*
*தாங்குகின்ற கிண்ணமே தள்ளாடும் - பூங்குடமே!*
*உன்னை உடுத்ததம்மா உன்னாடை; ஏனென்றால்*
*தன்னை அழகுசெய்யத் தான்!*

*வான்மாடந் தொட்டு வளரும்என் கற்பனையைத்*
*தேன்கூடை யாக்கிச் சிரிக்கவிட்டாய் - நான்கூட*
*பொல்லாத உன்கண்ணில் பூத்து நடந்ததம்மா*
*புல்லாங் குழல்ராகப் பூ!*

*தன்மேனி மாசுகளைத் தான்கண்டு நீக்கவென்று*
*கண்ணாடி உன்முகத்தில் கண்திறக்கும் - உண்மையம்மா!*
*விண்ணில் குளிக்க விதியில்லை என்றேஉன்*
*கண்ணில் குளிக்கும் கடல்!*

*தங்கக்கால் பின்னிவரத் தாய்மேகம் போலசைந்து*
*சங்கீத நாவிலெனைத் தாலாட்டி - இங்கிதமாய்*
*நீநடந்து வந்த நிழல்வழியே என்னிதயப்*
*பூநடந்து பார்க்கிறதிப் போது!*

*கோடிக் கனவுக் குவியலுக்குள் நானென்னை*
*மூடிப் புதைத்து முகம்மறைத்தேன் - ஓடிவா!*
*மங்கிக் கிடக்கும் மனவீட்டில் நீவந்து*
*தங்கக் கதவுகளைத் தட்டு!!*

●

(1974 – ஒரு ஜுலை மாலை)

# வாளெடுத்தார் வங்கத்தார்

*வங்கத்தில் விடுதலையை நாடி ஆங்கே*
*வாளெடுத்த போர்மறவர் கூட்டத் தைப்பார்!*
*அங்கத்தின் அணுவெல்லாம் புரட்சி பாடும்*
*அணித்தலைவன் ரகுமானின் படைகள் ஆங்கே*
*செங்குருதி அருவியெனக் கொட்டச் செய்தார்*
*சிறுமதியர் குறுந்தலையைக் கொய்து கொய்து*
*வெங்கனலில் இடச்செய்தார் வீரப் போரில்*
*வெற்றிபெற வந்தவரைச் சரிதம் பாடும்!*

*அடையில்தான் தேனிருக்கும்; அலைகள் தாவும்*
*ஆழியில்தான் முத்திருக்கும்; குமரிப் பெண்ணின்*
*தொடையில்தான் பூமஞ்சள் நிறமி ருக்கும்*
*துடியிடையில் கொடியிருக்கும்; காதல் நெஞ்சுக்(கு)*
*இடையில்தான் காவியத்தின் பொருளி ருக்கும்*
*இளங்குருதி துடிக்கின்ற வங்க நாட்டுப்*
*படையில்தான் பாய்வேங்கைத் துடிப்பி ருக்கும்*
*பாரிலுளோர் பேசுகிறார் பார்த்தோம்; கேட்டோம்.*

*கடலுக்கு முடிவுண்டு கரைதான் அஃதும்*
*கண்துடிப்பும் ஓயும்வரை ஆட்டம் போட்ட*
*உடலுக்கு முடிவுண்டு, பிணத்தின் காடு,*
*உண்மைக்கு முடிவுண்டு, பொய்யின் தோற்றம்!*
*மடமைக்கு முடிவென்ன? மக்கள் நெஞ்சில்*
*மலர்ந்துவரும் சிந்தனைகள்; வங்க மக்கள்*
*இடருக்கு முடிவென்ன என்ற போதில்*
*இருக்கின்றேன் எனரகுமான் எழுந்து வந்தான்!*

*மருக்கொழுந்து போலெண்ணிக் கள்ளிப் பூவை*
*மங்கையர்கள் சூடுவரா? பழுத்துப் போன*
*எருக்கிலையை உண்கலமாய்ப் பயன்ப டுத்தும்*
*இழிசெயலைப் புரிவோர்கள் எத்த னைபேர்?*
*கருங்கல்லைக் கற்கண்டாய் எண்ணிக் கொண்டு*
*கடிக்கின்ற பேருண்டோ? வங்க நாட்டைத்*
*தருக்கரிவர் ஆள்வதனைப் பொறுக்க நாமும்*
*தற்குறிகள் இல்லையெனச் சொன்னான் ரகுமான்*

புரியாத தத்துவத்தின் பொருளை இன்று
புரியவைக்க வந்தவரே ரகுமான் என்போம்!
நரிப்பேச்சுப் பேசுகின்ற யாகி யாகான்
நம்மவரின் உரிமைக்கு நெருப்பு வைத்தால்
எரிகின்ற தீயினிலே பகைவர் மெய்யின்
இடுப்பொடிப்போம் எனச்சொன்ன தலைவன் பேச்சைச்
சரியென்றார்; சாவுக்கு நாளைச் சொன்னார்
சரித்திரத்தில் பொன்னேடு மலர்ந்த தங்கே!

விழிப்புணர்ச்சி ஒன்றேதான் அன்னை நாட்டின்
விடுதலைக்கே உயிரூட்டும்; சொந்த நாட்டை
அழிப்பதற்குத் துணிகின்ற அரக்கர் நெஞ்சை
அக்கினியில் இட்டிடுவர்; வங்க மண்ணில்
குழிக்குள்ளே புதையுண்ட பிணங்கள் கூடக்
குருதியெலாம் துடிதுடிக்க உயிரைப் பெற்றுச்
சுழிக்காற்றாய்ச் சுழன்றாடிப் பகைவர் நெஞ்சைத்
துண்டித்துப் போட்டதடா! அதுதான் வீரம்!

வஞ்சமனம் வாழ்ந்ததாய் வரலா றில்லை
வட்டநிலா விண்மீனால் மறைந்த தில்லை
கொஞ்சுகுயில் இசையெல்லாம் கோட்டான் பாட்டால்
குறைபட்டுப் போனதில்லை; கொடுமை தன்னை
நெஞ்சுக்குள் வளர்த்திட்டோர் ஆட்சித் தீயால்
நிச்சயமாய் விடுதலைக்கும் அழிவே இல்லை!
சஞ்சலத்தைத் தந்தவர்கள் பாதி நாளில்
சாக்காடே பெறுவரிது சரிதச் சான்று!

●

# நினைவுகளே நில்லுங்கள்!

நீலவெளிப் பந்தலின்கீழ் நினைவுகளில் படுக்கையிட்டு
ஓலமிடும் உணர்வுகளில் உள்ளெழுந்த சிந்தனையைப்

பாடுகிறேன் பாடுகிறேன் பாட்டெழுந்த நேரத்தில்
வாடுகிறேன் ஆடுகிறேன் வசந்தவெளி தேடுகிறேன்

வாடைவிட்ட தென்றலுக்கு ஆடைகட்டிப் பார்க்கவென
மேடையிட்ட பூக்களின்மேல் மிதந்தபடி சாய்ந்திருந்து

பின்னிவரும் நினைவுகளைப் பின்னிறுத்த இயலாமல்
எண்ணியெண்ணிப் பார்க்கின்றேன் இதயநிறம் பார்க்கின்றேன்

மங்கிமங்கி எரிகின்ற மனவிளக்கின் வெளிச்சத்தில்
தங்கிவிட்ட நினைவுகளைத் தனிமையிலே வருடுகிறேன்

உலர்ந்துவிட்ட வார்த்தைகளை உள்நிறுத்தி வைத்துவிட்டு
மலர்ந்துவிட்ட நினைவுகளே! மௌனஇசை பாடுங்கள்!

கனவுகளில் பெற்றுவந்த கவிதைஇதம் தனையின்று
நினைவுகளே தாருங்கள் நெஞ்சகத்தில் மோதுங்கள்!

நேற்றிருந்த தனிமையிலேயே நீந்திவரும் நினைவுகளே!
ஊற்றெழுந்த தோற்றமென ஓரணியாய் நில்லுங்கள்

பனிமலரில் படுக்கையிட்டுப் பாற்குளத்தில் குளித்தெழுந்து
கனிவனத்தில் தலையுலர்த்திக் கரும்புவனச் சாற்றினிலே

பாதத்தைத் தோய்த்தெடுத்துப் பனி இதயத் தேர்மீது
வேதத்து மந்திரம்போல் வீதிவலம் போகின்ற

நினைவென்னும் பூமங்கை நெஞ்சோரம் கொஞ்சிவந்து
நனைக்கின்ற சுகம்பருக நாளெல்லாம் தனித்திருப்பேன்.

*காதலெனும் வான்வெளியில் கன்னிமனப் பூம்பறவை*
*நாதமெலாம் பாடிவந்து நடனமெலாம் இட்டதனை*

*நினைக்கவைத்து நினைக்கவைத்து நெஞ்சத்தை நினைவுகளால்*
*கனக்கவைத்துக் கொள்வதிலே கவிதைசுகம் தவழ்கிறது.*

*காதலெனும் விதைவிதைத்துக் கனவுகளால் நீர்பாய்ச்சி*
*காதலுக்கு இதமாகக் கவிதைகளால் வேலிகட்டி*

*நினைவுகளை அறுத்தறுத்து நெஞ்சோரம் குவிக்கையிலே*
*அணைக்கவரும் சுகமுளதே அப்பப்பா! அதுபோதும்.*

*ஓடிவந்த உறவுகளை உறவுதந்த கனவுகளை*
*மூடிவைத்து மறைத்தாலும் முன்னெழும்பும் காட்சிகளை*

*பள்ளிகொண்ட வேளையிலும் பதறாமல் நினைவுகளே*
*அள்ளிவந்து போடுங்கள் ஆனந்தம் பாடுங்கள்!*

*மோனவெளி நாடகத்தின் முடிவுரையை எழுதுமெனை*
*ஆனமட்டும் மகிழவைத்து அப்புறமாய் நினைவுகளே*

*அழவைத்துச் சிரியுங்கள் அருகழைத்து மீண்டுமெனை*
*எழவைத்து அமருங்கள்; இமைக்குள்ளே வீடுகட்டிக்*

*குடியிருந்து கொள்ளுங்கள்; குடிவெறியை வெல்லுங்கள்*
*முடிந்துவிட்ட கனவுகளின் முகங்காட்டும் நினைவுகளால்*


*தனிமையிலேயே கவிதைக்குத் தாலாட்டுப் பாடுகிறேன்*
*இனிமையிலே எனை மறந்து இசைக்கோலம் போடுகிறேன்.*

*நில்லாமல் நீந்திவரும் நினைவுகளால் தானிங்கே*
*சொல்லாமல் வாழுகிறேன் சுகத்துன்பம் தேடுகிறேன்*

*நினைவுகளே நீங்களெல்லாம் நில்லாமல் ஓடிவந்தால்*
*மனப்பந்தல் உங்களுக்கு மகிழ்வோடு நிழல்போடும்*

*என்மனத்தைப் பிரிந்துவிட்டு இருந்துவிட்டால் நினைவுகளே*
*என்னுயிரும் பிரியுமந்தை இடைவெளியில் சந்தியுங்கள்.*

(27.8.72 சென்னை வானொலி கவிக்குரலில் இளைய பாரதம் ஒலிபரப்பிய கவிதை)


மின்நூலாக்கம்
சுபாஷ் சண்முகா

# என் பழைய பனை ஓலைகள்

வைரமுத்து

